மலர்-3 இதழ்-64 ஏப்ரல் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர் mobile app
GET IT ON Google Play



e- magazine

# தீயைப் போன்றது திருவண்ணாமலை கிரிவலம்

e- magazine
www.aanmeegamalar.com

# சுவாமி பெயருக்கு அர்ச்சனை செய்யலாமா?

கோவிலில் சுவாமி பெயருக்கு அர்ச்சனை செய்யச் சொல்லி கேட்டிருப்போம். இது சரியா என்று சிந்தித்திருக்க மாட்டோம். அதுபற்றி ஒரு சிறிய விளக்கம்.

உலக ஜீவ ராசிகளை இயக்குபவர் இறைவனே.. இப்படியிருக்க, சுவாமி தனக்கு தானே அரச்சனை செய்வாரா?? அவரிடம் நம் பேரை சொல்லிதான் அரச்சனை செய்ய வேண்டும்.

அர்ச்சனை என்பது ஒரு குடும்பத்தினரின் இராசி, நட்சத்திரம், கோத்திரத்தை அர்ச்கரிடம் சொல்லி இறைவனிடம் நம் வேண்டுதலை சமர்ப்பிக்க வேண்டும்.

எடுத்து காட்டாக புரியும் படி ஒன்றை சொல்கிறேன் கேளுங்கள்.

நாம் ஒரு தபால் ஒன்றை எழுதுகிறோம் அதில் அனுப்புநர், பெறுநர், கடிதத்தில் கூற வருவது இதுபோல் எழுதினால் தான் தபால் முழுமை பெறும் அல்லவா!!

இதே போல் தான் அரச்சனையும், கடிதத்தில்

1. அனுப்புநர் தான் நாம்,
2. பெறுநர் தான் இறைவன்,
3. அந்த கடிதத்தில் உள்ள பொருள் தான் நம் கோரிக்கைகள்,

இப்போது புரிகிறதா அனுப்புநராகிய நாம், பெறுநராகிய இறைவனிடம் நம் கோரிக்கைகளை வைத்து சமர்ப்பிப் பதே அரச்சனையாகும்.

இனிமேல் நாம் கோவில் செல்லும் போது இறைவனிடம் நமது, நம் குடும்பத்தினர் பெயரைச் சொல்லி அர்ச்சனை செய்வதே சாலச் சிறந்தது.



# தண்ணீர் பிரச்சனை தீர

இந்த வருடம் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற பயம் மக்களிடையே உள்ளது. நாம் அனைவரும் சேர்ந்து தினமும் ஒரே நேரத்தில் காஞ்சி மகா பெரியவாளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்கண்ட ஸ்லோகங்களை 9 முறை பாராயணம் செய்து வந்தால் வருண பகவான் பார்வை நமக்கு கிடைக்கும்.

இந்த ஸ்லோக பாராயணத்தை காலை 7 மணி அளவில் செய்யலாம். அந்த, கருணாமூர்த்தி நமக்கு அவசியம் இரங்குவார்.

இந்த மந்திர பாராயணத்தை தனியாக சொல்வதற்கு பதில் ஒரு குழுவாக அமர்ந்து கூட்டுப்பிரார்த் தனை வழிபாடாக கூறினால் பலன் மிகுதியாக இருக்கும்.

அனைவரும் குடும்பத்துடன் குழந்தைகளையும் இந்த பாராயணத்தில் கலந்து கொள்ள வைத்தால் சிறப்பு.

ரிச்ய ஸ்ருங்காய முனயே
விபண்டக சுதாயச
நமஹ:சாந்தாதிபதயே
சத்ய: சத்வ்ருஷ்டி ஹேதவே

விபண்டக சுத: ஶ்ரீ மாந்
சாந்தாபதி ரகல்மஷ:
ரிஷ்ய ச்ருங்க இதிக்யாத:
மஹாவர்ஷம் பிரயச்சது

மேற்கண்ட மந்திரத்தை பாராயணம்செய்யும் போது அவசியம் மேற்கு நோக்கி அமர்ந்தோ நின்றோ இந்த ஜெபித்து மழை வர வேண்டிக் கொள்ளவும்.

தண்ணீருக்கு மக்கள் படும் அவஸ்தையை மகா பெரியவரின் மந்திரம் மூலம் தீர்த்துவைக்க அவசியம் முயற்சி செய்து பலன்பெறலாம்.

# காக்கை கறியும் சைவர்களும்

கால் வயிறு உணவு, கால் வயிறு தண்ணீர், கால் வயிறு காற்று எனவும் முன்னர் உண்ட உணவு செரித்தையும் அறிந்து உணவு எடுத்து கொள்பவர்களுக்கு நோய் அண்டாது என சித்த வைத்தியமும் சொல்கிறது. இதை அப்படியே சைவர்களும் பின்பற்றுகிறார்கள்.

"காக்கை கறி சமைத்து கருவாடு மென்று உண்பர் சைவர்'' என்று சொல்வார்கள் அதன் பொருளைப் பார்ப்போம்.

என்னது காக்கா கறி சமைச்சு கருவாடு தின்பவர்தான் சைவர்களா என பதற வேண்டாம்..

**காக்கை** = கால் கை அளவு

**கறி சமைத்து** = காய்கறி சமைத்து

**கரு வாடு** = கரு எனும் உயிர் வாடும் என்று

**உண்பர் சைவர்** = உண்பவர்கள் சைவ சமயத்தை சார்ந்தவர்கள் அதாவது சிவனை வழிபாடு செய்யும் சைவ சமயத்தை சேர்ந்தவர்கள் கால் வயிறு மட்டும் உண்பார்கள்.. இதுதான் அவர்களது அடிப்படை நியதி...இதனல்தான் சிவனடியார்கள் எப்போதும் ஒல்லியான தேகத்துடன் இருப்பார்கள் இப்படி இருந்தால்தான் முக்திக்கு வழிகாட்டியான தவம், யோகம் பயில முடியும்.

# நாம் எந்தவகை மனிதர்கள்

மனிதர்கள் முன்று வகை உண்டு
1. கஜ கர்ணம்,
2. அஜ கர்ணம், 3. கோ கர்ணம்

1. **கஜகர்ணம்:** யானை தனது நான்கு கால்களையும் சரியாக ஊன்றி நிற்காது! அதுபோல சில மனிதர்கள் ஒரே விஷயத்தில் தங்கள் கருத் தைச் செலுத்தாமல், பல விஷயங்களில் ஈடுபட்டுக் குழம்புவார்கள்... அவர்களை 'கஜகர்ணம்' போடுபவர்கள் என்று அழைக்கிறோம்.

2. அஜகர்ணம்: ஆட்டின் வாலைப் பிடித்து இழுத்தால் அது தன் தலையைத் தொங்கப்போடும். அதுபோல மனிதர்களில் சிலர் தங்கள் குறையை யாராவது சுட்டிக்காட்டினால் அவர்களை வெறுப் பார்கள்.... திரும்பிப் பார்க்க மாட்டார்கள்.

இதுபோன்றவர்களை 'அஜகர்ணம்' போடுபவர் கள் என்று அழைக்கிறோம்.

3.கோகர்ணம்: பசு மாட்டின் உடலில் எந்த இடத்தில் விரலால் தொட்டாலும், அந்த இடம் உணர்ச்சி வசப்பட்டு சிலிர்க்கும் ! அதுபோல அறிவாளிகள் எந்தச் சிறு குறையைச் சுட்டிக் காட்டினாலும் புரிந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுத் திருந்துவார்கள் . இவர்களை 'கோகர்ணம்' போடுபவர்கள் என்று அழைக்கிறோம்.

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# திருவண்ணாமலை கிரிவலம் தீயைப் போன்றது

பகவான் ரமணமகரிஷி திருவண்ணாமலை வந்த காலத்திலிருந்து, திருவண்ணாமலையை விட்டு வேறெங்கும் செல்லாமல் மக்களைத் தான் இருக்கும் இடத்திற்கு தன் தெய்வீக ஒளியால் வரவழைத்து, தன் பக்தர்களாக்கிய பெருமை ரமண மகரிஷிக்கே உரியதாகும்.

அருப்புக்கோட்டை நகரின் அருகிலுள்ள திருச்சுழியில் 1879 –ம் ஆண்டு பகவான் ரமணர் பிறந்தார்.

ரமணரின் சிறு வயதிலேயே தந்தை சுந்தரம் ஐயர் காலமானார், தாயார் அழகம்மை அரவணைப்பில் வளர்ந்த ரமணர் பள்ளி வயதுவரை சராசரி மாணவராகவே இருந்தார். விளையாட்டும் நீச்சலுமே அவரது பொழுதுபோக்கு.

தனது 16ம் வயதில் 1895–ல் அவரின் வீட்டிற்கு வந்த விருந்தினர் "அருணாசலத்திலிருந்து வருகிறேன்" என்று சொன்ன வார்த்தை அவரைப் பரவசப்படுத்தியது.

திருவண்ணாமலைதான் அருணாசலம் என்பதை அவர்மூலம் உணர்ந்தார். அதுமுதல் அவரது உள்ளத்தில் ஒரு புதிய கிளர்ச்சி ஏற்பட்டது.

பின்பு ஒரு சமயம் மரண பயம் அவரை ஆட்கொண்டது. அந்த அனுபவத்தைத் தானே உணர

ஒரு பிணம்போலப் படுத்தார், அவருள் ஏற்பட்ட உள்ளுணர்வு அவருக்கு இறப்பின் ரகசியத்தையும் இறப்பிற்குப் பின் என்ன என்பதையும் விளக்கியது.

1896 செப்டம்பர் முதல் நாள் ரமணரின் அருள்பாதம் அண்ணாமலை என்னும், அருணாசலத்தில் அடி வைத்தது. நேராகக் கோவிலுக்குள் நடந்தார்.

"அப்பா, நான் வந்துவிட்டேன்" என்றுகூறி அண்ணாமலையார் முன் ஆனந்தக் கண்ணீர் விட்டார். அவரது பிரயாணம் அன்றோடு நிறைவுபெற்றது.

அதற்குப் பிறகு தன் ஸ்தூல சரீரத்துடன் வேறு எங்குமே சென்றதில்லை.

ரமணரின் புகழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது. ரமண பகவானின் 'நான் யார்' என்ற தன்னையறியும் தத்துவ விளக்கம் அனைவரையும் கவர்ந்தது.

‘‘நான் என்பது எங்கிருந்து புறப்படுகிறதோ அதைக் கவனித்தால் மனம் அங்கே ஒடுங்கும், அதுவே தபஸ்!" என்பது போன்று விளக்கங்கள் அருளினார்.

ரமண மகரிஷி காலத்தில் அவரைக் கண்டோர் அடைந்த ஆனந்தத்திற்கும், துன்பங்கள் நீங்கி அமைதியடைந்த மக்களின் சுகத்திற்கும் அளவில்லை.

ரமணர் தனது ஆற்றலை வெளிப்படையாக யாருக்கும் காட்டுவதில்லை. பயன் அடைந்தோர் அவரிடம் நன்றி கூறினாலும் அதை அவர் ஏற்பதில்லை. மௌனமே அவரது ஆசீர்வாதம். மௌனமே அவரது பேச்சு.

ஆத்ம விசாரணை செய்யும் முறையை தெளிவுபடுத்தினார்.

கிரிவலத்தினால அடையும் நன்மை என்ன எனக் கேட்ட பக்தருக்கு,

"திருவண்ணாமலை கிரிவலம் தீயைப் போன்றது. தன்னைத் தொட்டவரைத் தீ சுடுவதுபோல அது உன்னை ஈர்க்கும். நம்பிக்கை உண்டோ இல்லையோ, ஒருமுறை கிரிப் பிரதட்சணம் செய்துபார்; நீயே உணர்வாய்" என்றார்.

ரமணரின் இந்த கூற்றுக்குப் பிறகே கிரிவலம் பிரபலமானது.

பவுர்ணமியில் இன்று லட்சக்கணக்கானோர் வலம் வருகின்றனர்.

'உன்னை விசாரித்து அறி' என்பது அவரது சுருதி வாக்கியம்.

அவருடைய உபதேசங்களின் சாரங்களில் சில:

இறைவனைச் சரணடை, சரணாகதியே மகத்தான பிரார்த்தனை.

எவர் முன்னிலையில் பரிபூரண அமைதி கிடைக்கிறதோ அவரே உன் குருவாவார்; குரு உள்ளும் இருக்கிறார், வெளியேயும் இருக்கிறார்.

எல்லாவற்றையும் துறந்து அகங்காரத்துடன் இருப்பதைவிட, அகங்காரத்தைத் துறந்த அரசனாயிரு.

இருபதாம் நூற்றாண்டில் மக்களுக்குத் தேவையான ஆன்மிகத்தை எளிமையாக உணர வைத்த ஞானி தனது ஸ்தூல உடலைவிட்டு ஜோதியாகி 1950ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் இரவில் அருணைமலையில் கலந்தார்.

அந்த ஜோதியை பல்லாயிரக்கணக்கானோர் அதே இரவு வானில் கண்டதாகக் கூறினர்.

ரமணர் பெரிய பிரசங்கம் நிகழ்த்தியதில்லை. தனக்கென சீடர் பட்டாளம் உருவாக்கவில்லை.

அவர் போதனை எல்லாம் அன்பான அருளுரையே!




ADVT
A GROUP OF VILLAVAN PUBLICATION
எதுவரினும் அஞ்சோம்! எமக்குத் தேவை நீதி!!
நிகழ்காலம்
அரசியல், சமூக, புலனாய்வு மாத இதழ்
global 2019
AWARDS
சமூக சேவை,
கல்வித்துறை,
தொழில் துறை,
பிற துறைகளை
சார்ந்த சாதனை புரிந்தவர்களை
கவுரவிக்கும் விழா...
MAY-12-2019
*entry fee
register soon...
editornigalkalam@gmail.com
7338881773 / 9677159070
web: www.nigalkalam.com
#16/18, Bharatheeswarar Colony, 4th St.,
Kodambakkam, Chennai-600 024.


புதிய பொலிவுடன்
Aanmeegamalar
(mobile app)
ஆன்மிகமலர் .காம்
வழிபாட்டுத் தலங்களைப் பற்றி குறிப்புகள்
YouTube
அற்புத வண்ணமயமான
ஆன்றோர் தத்துவங்கள்
பலன், பரிகாரம், ஜோதிடப் பலன்கள்
போன்ற புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது
GET IT ON Google Play
பயன்படுத்தி
புதிய mobile app டவுன்லோடு செய்து
மேற்கண்ட பகுதிகளை படித்து பயன் பெறுங்கள்
ஆன்மிகமலர்

# இளமை சுறுசுறுப்பிற்கு ஒரு சில மனப் பயிற்சிகள்

- தினமும் 10லிருந்து 30 நிமிடங்கள் நடந்து செல்லுங்கள். அவ்வாறு செல்லும் போது சிரித்த முகமாகச் செல்லுங்கள்.
- தினமும் ஒரு 10 நிமிடங்களாவது, எந்த சிந்தனைகளும் இல்லாமல் அமைதியாக கண்ணை மூடி அமருங்கள்.
- தினமும் ஏழு மணி நேரம் உறங்குங்கள்.
- எப்போதும் இரக்கம், உற்சாகம், ஊக்கம், கருணை ஆகிய குணங்கள் மனத்தில் நிறைந்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- அதிக நேரம் ஏதாவது விளையாடுங்கள்.
- அதிகமான ஆன்மீக மற்றும் விஞ்ஞான புத்தகங்களை படியுங்கள்.
- உங்கள் தினசரி அலுவலில் தியானம், யோகம், வழிபாடு போன்றவற்றிற்கு இடம் கொடுங்கள். இவை உங்கள் வாழ்க்கைக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.
- உங்கள் ஓய்வு நேரத்தை 70 வயது கடந்த முதியவர்களுடனும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுடனும் செலவழியுங்கள்.
- அடிக்கடி நிறைய கனவு காணுங்கள், விழித்திருக்கும் போது!
- மரங்களிலும், செடி கொடிகளிலும் விளையும் உணவுப்பொருட்களை பச்சையாக அப்படியே நிறைய உண்ணுங்கள்.
- தினசரி மூன்று நபர்களையாவது மகிழ்ச்சிப்படுத்துங்கள்.
- தினமும் நிறைய தண்ணீர் அருந்துங்கள்.
- உங்களுக்குள் உன்னதமான ஆற்றல் மறைமுகமாக இருப்பதை உணருங்கள்,
- நீங்கள் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் வானில் சுதந்திரமாக பறக்கும் பறவையாக உணருங்கள்.
- பாசிட்டிவான எண்ணங்களை உங்களின் மனதில் தினமும் ஐந்துமுறை உருவாக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி வாழுங்கள்.
- நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கையே உலகில் சிறப்பானது என்று உணருங்கள்.
- உங்களின் காலை உணவை ஓர் அரசன் போல அருந்துங்கள்; மதிய உணவை ஓர் இளவரசன் போல உண்ணுங்கள்; இரவு உணவை ஒரு பிச்சைக்காரன் போல உண்ணுங்கள்.
- நன்றாக வாய்விட்டு சிரியுங்கள்.
- எல்லோரிடமும் அன்பு கொண்டுவாழ்ந்தால் இறைவனும் உங்களிடம் அன்பு செலுத்துவான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்,
- வாழ்க்கையை டேக் இட் ஈஸி'யாக எடுத்துக் கொள்ளுங்கள்.
- அனாவசியமான விவாதங்களில் கலந்து கொள்ளாதீர்கள்.
- உங்களின் கடந்தகால வாழ்க்கையை மிகவும் சிறப்பான முறையில் இறைவன் நடத்தி வந்துள்ளார் என்பதை உணர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- மற்றவர்களுடைய வாழ்க்கையுடன் உங்களுடைய வாழ்க்கையை ஒப்பிட்டு உங்களை உருவாக்கிய இறைவனை தயவுசெய்து கேவலப்படுத்தாதீர்கள்.
- உங்களுடைய மகிழ்ச்சிக்கும், மன அமைதிக்கும் காரணம், கடவுள் உங்களிடம் காட்டும் கருணைதான் என்பதை என்றுமே மறவாதீர்கள்.
- எவரையும், எதற்காகவும், எந்த சந்தர்ப்பத்திலும் மன்னிக்கத் தயாராக இருங்கள்.
- ‘உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்’ என்று யோசிப்பதை தவிருங்கள். உங்களைப் பற்றி என்றுமே உயர்வாக எண்ணும் பழக்கத்தை கை விடாதீர்கள்.
- இதுவரை உங்களை காப்பாற்றி வந்த கடவுள் இனியும் உங்களை என்றென்றும் காப்பாற்றுவார் என்பதை மனதார உணருங்கள்.
- நல்லதே நடக்கும் என்று நம்புங்கள்.
- உங்களுடைய இன்பத்தில் பங்கெடுத்துக் கொள்பவர் அனைவரையும் மிக அதிக அளவில் பாராட்டுங்கள். அவர்களிடம் நிரந்தரமாக தொடர்பு வைத்திருங்கள்.
- உங்களுக்கு மகிழ்ச்சியளிக்காதவை எதுவாக இருந்தாலும் அவைகளிடம் இருந்து விலகி ஓடி விடுங்கள்.
- உங்கள் தேவைக்கு அதிகமாகவே அனைத்தையும் உங்களுக்கு தந்து வருகிற இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- வாழ்வின் 'உன்னதம்' என்பது ஏற்கெனவே உங்களுக்கு முழுவதுமாக நிச்சயம் வந்து விட்டது என்று நம்புங்கள்.
- நீங்கள் எந்த மனநிலையில் இருந்தாலும் நன்றாகக் குளித்து, சுத்தமான ஆடையை அணிந்து கொள்ளுங்கள்.
- உங்களுக்கு நன்மை என்று தோன்றும் செயல்களை உடனே செய்யுங்கள்.
- எத்தனை 'பிஸி'யாக இருந்தாலும் குடும்பத்தினருடன் பேசி மகிழுங்கள்.
- உங்களுக்கு உள்ளே இருக்கும் 'ஆன்மா' எப்போதும் ஆனந்தமாக இருப்பதை உணர்ந்து, நீங்களும் ஆனந்தமாக இருங்கள்.
- தினசரி மற்றவருக்குப் பயனளிக்கும் வகையில் ஒரு சிறிய செயலையாவது செய்யுங்கள்.
- நீங்கள் வரம்பே இல்லாத வலிமை பெற்றவர் என்பதை அறிந்து எந்தச் செயலிலும் துணிந்து இறங்குங்கள்.
- நீங்கள் காலையில் கண் விழித்தவுடன் கடவுளுக்கு நன்றி தெரிவியுங்கள்!
- நீங்கள் தூங்கும் முன்பு மகிழ்ச்சிகரமான தினத்தை தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.



# தங்கம் துன்பப்பட்டால் ஆபரணமாகும் மனிதன் துன்பம் அடைந்தால் மனம் செம்மையாகும்

நம்முடைய உறுப்புகள் ஒவ்வொன்றையும் ஒரு தெய்வீக சக்தியே இயக்குகிறது. சூரிய ஒளியின் துணையால் கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுகின்றன. சிந்தனை சக்தியால் மனம் வளம் பெறுகிறது. இந்த சிந்தனைச் சக்தி, கலைத்தேவியின் அருளால் கிடைக்கிறது. இப்படி நம் உடலில் ஒவ்வொன்றையும் தெய்வீகச் சக்தியே இயக்குகிறது.

நம் உடம்பே இறைவன் இருக்கும் கோவில். மனத்தூய்மையும், சுயகட்டுப்பாடும் கொண்டவர்கள் உள்ளத்தில் இறைவன் விருப்பத்துடன் கோவில் கொள்கிறான். மூன்று குணங்களையும் கடந்த வர்களாக இருப்பது மிகவும் கடினம். இறையனுபூதி பெறாமல் இந்த நிலை ஏற்படுவது இல்லை. மாயை, இறைவனை அறிவதற்கு விடுவதில்லை. மாயை நம்மை அஞ்ஞானத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறது.

**இருண்ட அறையில் அசுத்தமும், தூசியும் நிறைந்து இருக்கும். நாளடைவில் தேள், பாம்பு போன்ற விஷஜந்துக்களும் ஒளிந்து கொள்ள ஏதுவாகும். அதே அறையை சுத்தமாக்கி, கதவு ஜன்னல்களைத் திறந்து வைத்தால் வெளிச்சமும், நல்லகாற்றும் வர வழியுண்டாகும்.**

**அதுபோல, மனம் என்னும் வீட்டில் காமம், கர்வம், பொறாமை போன்ற விஷஜந்துக்களை நுழைய விடாமல் அன்பு என்னும் ஒளியை பரப்புங்கள். தூய்மை என்னும் காற்றையும் நிரப்புங்கள்.**

தங்கத்தை செய்யும் பொற்கொல்லரிடம், ""நான் கொடுக்கும் தங்கத்தை நெருப்பில் போடாதீர்கள். அடித்து துன்புறுத்தாதீர்கள். அதை தட்டி நீட்டவும் வேண்டாம். ஆனால், அழகான தங்கச்சங்கிலியாக மட்டும் மாற்றுங்கள்," என்று சொன்னால் என்ன செய்யமுடியும். தங்கத்தை ஜொலிக்கச் செய்ய வேண்டும் என்றால் நெருப்பில் இட்டு புடம் போட்டால் தான் முடியும். அதை தட்டி, உருக்கி செய்வதெல்லாம் அது அழகிய அணிகலனாக மாறச் செய்வதற்காகவே. இதுபோல, ஆன்மிகவாழ்வில் ஈடுபடும் சாதகர்கள், "இறைவா! எனக்குத் துன்பத்தைக் கொடுக்காதே. என்னை வருத்தாதே. ஆனால், ஆனந்தம் மிகுந்த ஆத்ம



அனுபவத்தை மட்டும் கொடு," என்று கேட்கிறார்கள். இது எப்படிச் சாத்தியம்?

வாழ்வில் துன்பம் நேர்ந்தாலும் தெய்வத்தின் பாதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இன்பதுன்பங்கள் எதுவானாலும், அது அவன் காட்டிய வழி என்று பூரணமாக முழுமனதுடன் ஏற்று, அவரது திருவடிகளைச் சரணடைய வேண்டும். நம்முடைய செயல்கள் எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்படைத்து விட்டால் அதன்பின்னர் புறநிகழ்ச்சிகளும் நம்மைப் பாதிப்பதில்லை. புடமிட்ட தங்கம் இறுதியில் நல்ல மதிப்புடைய அணிகலனாக மாறுவதுபோல துன்பம் தரும் அனுபவங்கள் அனைத்தையும் நம்மைச் செம்மைப்படுத்துவதற்காகவே இறைவன் தருகிறான்.

**கண்ணிமையில் பூசிய கருநிற மை கண்ணுக்குள் படிவதில்லை. நீரில் இருக்கும் தாமரை மலர் சேற்றினைத் தீண்டுவதில்லை. கடவுளை முற்றிலுமாக உணர்ந்தவர்கள் உலகவாழ்வில் ஈடுபட்டாலும், அவர்கள் மனம் அதில் ஈடுபடுவதில்லை.** எப்போதும் இறைவனையே எண்ணிக் கொண்டு இருப்பர். அந்நிலையை நாம் ஒவ்வொருவரும் எட்ட வேண்டும்.

– பெரியவா

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# உடலில் உயிர் நுழையும் ரகசியம்!!!

■ சத்குரு



புதிதாகப் பிறந்த குழந்தைக்கு மண்டையோட்டின் குறிப்பிட்ட பகுதி இன்னமும் சரியாக உருவாகாமல் இருப்பதை கவனிக்க முடியும். அந்தப்பகுதி இன்னமும் தோலாகத்தான் இருக்கிறது, எலும்பு உருவாகவில்லை.

இந்தப் பகுதி யோகாவில் 'பிரம்மரந்த்ரா' அல்லது 'ரந்த்ரா' என அழைக்கப்படுகிறது. அதற்கு சிறிய துவாரம் அல்லது வழி என்று பொருள்.

கருவில் குழந்தை வளரும்போது இந்தப் பகுதி வழியாகத்தான் உயிர் அந்த குழந்தைக்குள் இறங்குகிறது. இறங்கிய உயிர் இந்த (குழந்தையின்) உடல் தன்னை தாங்கக்கூடிய அளவில் இருக்கிறதா என்று தொடர்ந்து கவனிக்கிறது. அந்த அளவிற்கு அதற்கு விழிப்புணர்வு இருக்கிறது.

தன் இருப்பிற்கு அந்த உடல் தகுதியானதல்ல என்று அது கருதினால் தான் வந்த வழியாகவே திரும்பிப் போய்விடும்.

எனவே கடைசிவரை அந்த இடத்தை தான் போவதற்கு வசதியாக அப்படியே வைத்திருக்கிறது. வேறு எந்த வழியாகவும் போவதற்கு அது விரும்புவதில்லை.

ஒரு நல்ல விருந்தாளி எப்போதும் முன் வாசல் வழியாகத்தான் வருவார், முன் வாசல் வழியாகத் தான் போவார். முன் வாசல் வழியாக வந்து பின் வாசல் வழியாகப் போனால் உங்களை சுத்தமாக துடைத்து விட்டார் என்று பொருள்.

மருத்துவர்கள் அறிந்திருப்பார்கள், இறந்தே பிறக்கும் குழந்தை மிக நன்றாக, ஆரோக்கியமாகத்தான் இருக்கும், ஆனாலும் உயிர் இருக்காது.

ஏனெனில் உயிருக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு கடைசி வரைக்கும் இருக்கிறது.

தன் இருப்பிற்கு அந்த உடல் தகுதியானதல்ல என்று அது கருதினால் தான் வந்த வழியாகவே திரும்பிப் போய்விடும்.

உயிர் தனது கர்ம வினையைக் கொண்டிருக்கிறது. கருவில் வளரும் பிண்டமோ பெற்றோரின் கர்ம வினையைக் கொண்டிருக்கும். எனவே உயிர் தனது விருப்பப்படி தேர்ந்தெடுக்கிறது.

90 சதவீதம் சரியாகத் தேர்ந்தெடுத்து விடுகிறது. சில நேரங்களில் அதனுடைய தேர்வு தவறாகி விடுகிறது. எனவேதான் ஒருவர் கர்ப்பமாக இருக்கும்போது அவருக்கு சரியான சூழ்நிலை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இப்போது அப்படி யாரும் பார்ப்பதில்லை. ஏனெனில் பெண்கள் இப்போது வேலைக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டனர். அது மட்டுமல்ல கர்ப்ப காலத்திலும் வேலைக்குச் செல்கின்றனர், சினிமா பார்க்கின்றனர், எல்லா இடத்திற்கும் செல்கின்றனர். தங்களை விட ஒரு நல்ல உயிர் அந்த கர்ப்பத்தில் தங்க வேண்டுமென்பதற்காக ஆணும் பெண்ணும் முன் காலத்தில் எல்லா முயற்சியும் எடுத்தனர்.

எனவே கர்ப்பமாக இருக்கும் தன் மனைவியைப் பார்க்க கணவன் கூட ஒரு காலகட்டத்திற்கு மேல் அனுமதிக்கப் படுவதில்லை. ஏனெனில் சுகமான சூழ்நிலையில், மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில், எண்ணங்கள் பாதிக்கப்படாத சூழ்நிலையில், எல்லா நிலையிலும் பாதுகாப்பாக கர்ப்பமுற்ற பெண் இருக்குமாறு பார்த்துக் கொண்டனர்.

சரியான உயிரை வரவேற்க வசதியாக அப்பெண்ணின் தன்மை இருக்கும்படி, சரியான உணர்ச்சிகள், சரியான சப்தங்கள், சரியான மந்திரங்கள், சரியான உணவு ஆகியன அனைத்தும், இருக்குமாறு பார்த்துக்கொண்டனர்.

ஒரு வேளை இன்றைய உலகத்தில் இவையனைத்தும் பொருந்திவராமல் இருக்கலாம். எனவே ஒரு உயிர் குறிப்பிட்ட ஒரு கருவில் இறங்கி, நாளடைவில், தான் குழந்தையாக மாற அந்தக் கரு தகுதியானதல்ல என்று கருதினால், கருவை விட்டுப் போய்விடுகிறது.

எனவேதான் அந்த வளரும் பிண்டத்தில் ஒரு வழி எப்போதும் திறந்தே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வழிதான் பிரம்மரந்திரா. உங்கள் வாழ்வின் இறுதியில் ஒரு நாள் நீங்கள் இந்த உடலை விட்டுப் போகும்போது எந்த வழியாக வேண்டுமானாலும் போகமுடியும், ஆனால் போவதற்கு சிறந்த வழி பிரம்மரந்திராதான்.

விழிப்புணர்வுடன் உடலின் எந்தப் பகுதி வழியாக வெளியேறினாலும் அது நல்லதே. ஆனால் பிரம்மரந்திரா வழியாக வெளியேறுவது மிகச் சிறந்தது.

இந்த பெரிய வாய்ப்பைப் பற்றி நிறைய பேர் பேசியிருப்பதாலும், நிறைய புத்தகங்கள் இதைப் பற்றி சொல்லியிருப்பதாலும், மக்கள் தங்கள் உச்சந்தலையிலும், நெற்றியிலும் ஏதாவது கற்பனை செய்து கொள்கிறார்கள். ஒன்றை நீங்கள்

புரிந்து கொள்ள வேண்டும். எங்கே உங்கள் மனதை குவிக்கிறீர்களோ அங்கே சிறிது அரிப்பு உணர்வு தோன்றும். இப்போது வேண்டுமானால் முயற்சி செய்து பாருங்கள்.

உங்கள் வலது சுண்டு விரலை இப்படி வையுங்கள், அதன் முனையில் உங்கள் மனதை குவியுங்கள், சில நிமிடங்களில் அங்கே ஒரு அரிப்பு உணர்வு தோன்றும், ஏன்?

உடலின் எந்த பகுதியில் மனதைக் குவித்தாலும், அங்கே சிறிது அரிப்பு உணர்வு தோன்றும். அதை வைத்து உங்களுக்குள் ஏதோ பெரிய செயல்முறை நடந்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் முடிவு செய்யக்கூடாது.

அல்லது உடலிலேயே சில முறை அங்கங்கே அரிப்புகள் உணரலாம். எப்போதாவது உங்களுக்கு இப்படி நடக்கும். நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள், அப்போது உங்கள் உடலில் அங்கங்கே அரிப்பு உணர்வு தோன்றலாம், குறிப்பாக நீங்கள் மிகவும் பதட்டமாக இருக்கும்போது அப்படி அடிக்கடி நடக்கும். நீங்கள் தளர்வாக இருக்கும்போது அப்படி நடக்காது. நீங்கள் பதட்டமாக இருக்கும்போது அங்கங்கே அரிப்பு உணர்வு தோன்றுவதால் அதை நீங்கள் வேறுவிதமாக முடிவு செய்துவிடக்கூடாது.

நான் இதை சொல்லலாமா என்று தெரியவில்லை, ஏனெனில் சொல்லிவிட்டால் பிறகு நீங்கள் நிறைய கற்பனை செய்ய ஆரம்பித்து விடுவீர்கள்.

நீங்கள் தியானம் செய்பவராக இருந்தால், நீங்கள் சாம்பவி பயிற்சியை செய்வதால், இப்போது கூட நீங்கள் அதை பரிசோதித்துப் பார்க்கலாம்.

நான் எப்போதும்இது போன்ற விஷயங்களை தவிர்த்தே வந்திருக்கிறேன், ஏனெனில் மக்கள் பிறகு அது போன்ற விஷயங்களில் மிகவும் கற்பனை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

இதை நீங்கள் செய்து பார்க்க வேண்டாம், அது தேவையில்லாதது. நான் எனது பிரம்மரந்திராவின் மேல் கைவைத்தால், நான்கு அடிக்கும் மேல்வைத்தால் கூட, கை 8 போன்ற அமைப்பில் இருப்பதை உணர முடிகிறது. சக்தி நிலைகளை ஒரு குறிப்பிட்ட நிலையில் வைக்கும்போது எப்போதும் அப்படி நடக்கிறது.

இப்படி ஒவ்வொருவருக்கும் நடக்க முடியும். ஆனால் அது உள்ளுக்குள் நடக்கிறது. ஏன் அப்படி நடக்கிறது என்றால் நம்மில் உள்ள 114 சக்கரங்களில் 2 சக்கரங்கள் உடலுக்கு வெளியே இருக்கிறது.

பொருள்தன்மைக்கும் அப்பால் உள்ள பரிமாணம் நிலையான செயல்முறையாக மாறினால், சில ஷணங்களுக்கு உங்களையும் தாண்டிய சில விஷயங்கள் நடப்பதை உணரமுடியும்.

எனவே உங்கள் பொருள்தன்மையைத் தாண்டிய பரிமாணம் தொடர்ந்த செயல்முறையாக மாறும்போது, உடலுக்கு வெளியே செயலற்ற நிலையில் உள்ள 2 சக்கரங்கள் செயல்படத் துவங்குகின்றன.

அவை அப்படி செயல்படத் துவங்கும்போது, உங்கள் தலையில் ஒரு ஆன்டெனாவை நீங்கள் பெறுகிறீர்கள்.

உயிர்த்தன்மை குறித்த சில புரிதல்களை அது வழங்குகிறது.

இதில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. மேலும் அது எப்போதும் உங்களை வாழ்வு மற்றும் அதற்கும் அப்பால் உள்ளவற்றின் விளிம்பில் நிறுத்திவிடுகிறது.

ஒரு யோகியின் நோக்கமும் எப்போதும் அப்படித்தான் இருக்கிறது, ஏனெனில் விரும்பும் ஷணத்தில் விழிப்புணர்வுடன் உடலை விட முடியும்.

நீங்கள் சமநிலையில் இருக்கத் தெரிந்தவராக இருந்தால் கயிற்றின் மீது நடப்பது கூட பாதுகாப்பானது தான், இல்லையா? அப்படி இருக்கத் தெரியாதவருக்கு அது அபாயமான விளையாட்டாகத் தெரிகிறது.

சென்னை தெருக்களில் கார் ஓட்டுவதை விட அது மிகவும் பாதுகாப்பானதுதான், இல்லையா? எல்லாம் உங்களைப் பொறுத்ததுதான், சென்னை தெருக்கள் உங்கள் கையில் இல்லை, ஆனால் கயிற்றின் மீது நடப்பது உங்கள் கையில் இருக்கிறது, இல்லையா? எப்படி நடப்பது என்று தெரிந்து கொண்டால் அது பாதுகாப்பானதுதான்.



எனவே நீங்கள் சமநிலையில் இருந்துவிட்டால் விளிம்பில் இருப்பதும் பாதுகாப்பானதுதான். அதில் அபாயம் ஏதும் இல்லை. தவறி கீழே விழும் வாய்ப்பு கிடையாது.

ஆனால் அது உங்களுக்கு விடுதலையை தருகிறது.

ஏதாவது தவறாகி விடும் பட்சத்தில் நீங்களாகவே வெளியேறிவிடலாம். விழிப்புணர்வின்றி போகத் தேவையில்லை.

இப்போது அது போல எதுவும் நடக்கவில்லை. நீங்கள் விளிம்பில் இல்லை.ஒன்று நீங்கள் உங்கள் ஆத்ம சாதனையைத் தொடரலாம். அல்லது அந்த சக்திநிலையை பெரியதொரு வாய்ப்பாக மாற்ற முடியும்.

# சகஜ சமாதி

ஆன்மிகத்தில் இறைவனை அடைய பல வழிமுறைகள் இருக்கின்றனது. இன்றும் ஒருசில ஞானிகள், சித்தர்கள், மகான்கள் நம் அருகில் கூட இருக்கலாம் ஆனால் நமக்கு அவரை அடையாளம் காண்பது இயலாத காரியமாக இருக்கும்.

சாதாரண மனிதனைப் போன்றே அவர்கள் உலகில் வலம் வருவார்கள். இப்படிப்பட்டவர்களை சகஜ சமாதியில் இருப்பவர் என்று ஆன்மிகத்தில் கூறப்படுகிறது. இந்த சகஜ சமாதி பற்றி ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

ஒருவன் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்கிறான். அப்போது அவனுக்குத் தூக்கம் வந்துவிடுகிறது.

மாடுகள் நடந்துகொண்டே இருக்கின்றன. பல இடங்களைக் கடந்து செல்கின்றன. வழியிலே சோலைகளும் ஊர்களும் இருக்கின்றன. அவற்றின் வழியே அந்த மாட்டு வண்டி செல்கிறது.

வண்டி செல்வதனால் அதற்கும் தூங்கும் மனிதனும் அந்த வழியிலே சென்றவன் ஆகிறான்.

வண்டி ஓரிடத்தில் நிற்கிறது.

சிறிது நேரம் கழித்து வண்டியில் இருப்பவன் விழித்துக்கொள்கிறான்.

அதற்கு முன் அவன் கடந்த வழி அவனுக்குத் தெரியாது. அங்கிருந்த காட்சிகளையும் அவன் அறிந்திருக்க மாட்டான்.

ஆனாலும்,

அவன் அத்தனைக் காட்சிகளையும் கடந்தே வந்திருக்கிறான்.

சகஜ சமாதியில் இருக்கும் ஆத்ம ஞானி உலகில் வாழ்ந்தாலும் அதில் ஈடுபடா மல் அதனால் வேறுபாடு அடையாமல் இருக்கிறான்.

இதனால்தான் அனைவரையும் தெய்வமாக பாருங்கள் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

# தூக்கிப்போட்ட துணி அணிந்துகொண்ட பாண்டுரங்கன்

ஒவ்வொரு ஆலயங்களிலும் ஒவ்வொரு விதமான சம்பிரதாயங்கள் நடக்கும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிப்பினையைச் சொல்கிறது. அதை அறிந்து கொள்வதன் மூலம், நம் அகம் உள்ளம் தூய்மை பெறும்; தெளிவு பிறக்கும்.

அந்தவகையில் பண்டரிபுரத்தில் வீற்றிருக்கும் பாண்டுரங்கன் எளிமைக்குத்தரும் முக்கியத்துவத்தைப் பார்ப்போம்.

பண்டரிபுரத்தில், பண்டரிநாதனுக்கு பல பட்டாடைகள் அணிவித்து இருப்பர். கூடவே, ஒரு சாதாரண நூல் ஆடையும் அணிவிக்கப்பட்டிருக்கும், இதற்கான காரணம் மிகவும் சுவாரஸ்யமானது.

மதுரா நகர் மன்னரிடம், அமைச்சராக இருந்தவர் திருபுரசுந்தரார். சிறு வயதில் இருந்தே மிகுந்த தெய்வ பக்தி உள்ளவர்.

ஒரு கால கட்டத்தில், 'இவ்வுலக இன்பங்கள் எதுவுமே நிலையானது அல்ல; பகவான் மட்டுமே நிலையானவர்...' என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக, தன் பதவியைத் துறந்தார்.

அத்துடன் தன் செல்வங்கள் அனைத்தையும் ஏழை, எளியவர்களுக்கு தானம் செய்தவர், ஒரு யாசக பாத்திரத்துடனும், தன் மனைவியுடனும் திருத்தல யாத்திரைக்கு புறப்பட்டார்.

இருவருமாக, ஊர் ஊராக, வீதி வீதியாக பகவானின் புகழைப் பாடி யாசகம் செய்து, கிடைத்ததை கொண்டு வாழ்ந்து வந்தனர்.

பண்டரிபுரத்தை அடைந்ததும், அங்கேயே தங்கி, பாண்டுரங்கனின் மகிமையை சொல்லி, கதாகாலட்சேபம் செய்து வந்தனர்.

மக்கள் அவரை திருபுரதாசர் என, அன்புடன் அழைத்தனர்.

இந்நிலையில் ஒரு நாள், பாண்டுரங்கனுக்கு சாற்றப்பட்ட ஆடைகள், பழசாகிப் போனதால், ஊர் முக்கியஸ்தர்களும், செல்வந்தர்களும் பாண்டுரங்கனுக்கு பளபளக்கும் பட்டாடைகளை காணிக்கையாக வழங்க முன் வந்தனர்.

அதற்காக, விசேஷ பூஜை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தகவல் அறிந்த திருபுரதாசரும், பாண்டுரங்கனுக்கு ஒரு ஆடை வாங்க நினைத்தார்.

அதனால், தன்னிடமிருந்த பிச்சை பாத்திரத்தை விற்று, அதில் கிடைத்த சொற்ப காசைக் கொண்டு, ஒரு சாதாரண நூல், அங்கவஸ்தரத்தை வாங்கி வந்தார்.

அர்ச்சகரோ, செல்வந்தர்கள் அளித்த பட்டாடைகளை வாங்கி, ஸ்வாமிக்கு சாற்றினாரே தவிர, திருபுரதாசர் அளித்ததை அணிவிக்கவில்லை.

மாறாக, அதை வாங்கி, சன்னிதியின் வெளியில் வீசியெறிந்தார். இதைப் பார்த்து, மிகுந்த மன வருத்தத்துடன் வெளியேறினார் திருபுரதாசர்.

அன்றிரவு நேரம் கடந்து விட்டதால், சன்னிதியிலேயே படுத்து விட்டார்



அர்ச்சகர்.

நள்ளிரவில், சன்னிதிக்குள் திடீரென்று குளிர் காற்று வீச துவங்கியது.

இதனால், தூக்கத்திலிருந்து விழித்த அர்ச்சகர், கர்ப்பகிரகத்தில் பாண்டுரங்கனின் விக்கிரகம், குளிரில் நடுங்குவதைப் பார்த்து, திகைத்து, பயந்து போய் ஊர் மக்களை கூட்டி விட்டார்.

தகவல் தெரிந்து திருபுரதாசரும் அங்கு வந்தார்.

பகவானின் திருமேனி நடுங்குவதை பார்த்து, கூடியிருந்த அனைவரும், வீட்டிலிருந்த விலை உயர்ந்த சால்வைகளையும், கம்பளிகளையும் எடுத்து வந்து கொடுத்தனர்.

அவற்றை வாங்கி பகவானுக்கு போர்த்தினார் அர்ச்சகர். அப்போதும் நடுக்கம் நிற்கவில்லை. அனைவரும் பதறினர்.

அப்போது, கருவறையிலிருந்து, 'குழந்தைகளே... பயம் கொள்ளாதீர்கள்.

எவன் ஒருவன் என் மீது கொண்ட மாசற்ற அன்பால் சிறு துரும்பைக் கூட எனக்கு காணிக்கை ஆக்குகிறானோ, அதுவே என் மனதை குளிர்விக்கும்.

என் பக்தன் திருபுரதாசனின் அன்புக் காணிக்கையை அலட்சியப்படுத்தி, அவனை அவமானப்படுத்தியதன் விளைவால் என் உடல் நடுங்குகிறது.

அவர் அன்புடன் கொடுத்த வஸ்திரத்தால் என் திருமேனியை போர்த்துங்கள் என்ற அசிரீரி கேட்டது.

தன் தவறை உணர்ந்த அர்ச்சகர், திருபுரதாசரின் கால்களில் விழுந்து, மன்னிக்கும்படி வேண்டினார்.

தான் வீசியெறிந்த நூலாடையை தேடிப் பிடித்து, பகவானின் திருமேனியில் போர்த்தினார்; பகவானின் நடுக்கம் நின்றது.

உத்தம பக்தரான திருபுரதாசரின் அன்பு காணிக்கையின் அடையாளமாக தான், இன்றும் பண்டரிபுரத்தில் பகவானின் திருமேனியில், சாதாரண நூல் அங்கவஸ்திரம் சாற்றப்படுகிறது.



# அமிர்தமும் தேங்காயும்

தேங்காய் உபயோகம் மாரடைப்பில் முடியும் என்று நிறைய பேர் கைவிட்டனர் ஆனால் நமது பாரம்பரிய உணவுகளில் தேங்காய்க்கு முக்கியத்துவம் தந்தனர் ஆனால், மேற்கூறிய பிரச்சனை யாருக்கும் வந்தது கிடையாது.

ஆனால் நாம் தேங்காய் பயன்பாட்டை குறைத்ததும் பல இன்னல்கள் மனிதர்களிடம் உருவாவதை மறுக்க முடியாது:

பச்சை தேங்காயின் பயன்கள்

தேங்காயை பச்சையாக ஒரு வேலை உணவாக எடுப்பதினால் ஏற்படும் நன்மை:

பொதுவாக தங்காயில் அதிகமாக கொழுப்பு உள்ளது என்பது உண்மைதான். ஆனால் எப்பொழுது கொழுப்பு உருவாகும் என்றால் அதை சமைக்கும் போதுதான் தேங்காய் கொழுப்பாக மாறும்.

தேங்காயை உடைத்த அரைமணி நேரத்திற்குள் பச்சையாக சாப்பிட்டுவிட்டால், அதுதான் அமிர்தம். சகலவிதமான நோய்களையும் குணமாகும்.

உடம்பில் உள்ள கெட்ட கொழுப்பு மற்றும் அழுக்குகளை அகற்றும்.

இரத்தத்தை சுத்தமாக்கும். உடலை உரமாக்கும். உச்சி முதல் பாதம் வரை உள்ள உருப்புகளை புதுப்பிக்கும்.

தேங்காய்க்கும் நமக்கும் உள்ள ஒற்றுமை.

நாம் அன்னை வயிற்றில் இருந்து பூமிக்கு வர 10 மாதம் அதுபோல. தேங்காய் கருவாகி பூமிக்கு வர 10 மாதம் ஆகும்.

இனி முடிந்த அளவு தேங்காயை பச்சையாக உண்போம்.

தேங்காயை சமைத்து சாப்பிட்டால் கெட்ட கொழுப்பாக (கொலஸ்ட்ரால்) மாறிவிடும். சமைக்காமல் அப்படியே உண்டால் நல்ல கொழுப்பு (கொலஸ்ட்ரால்)

தேங்காயை துருவி சிறிது நாட்டு சர்க்கரை சேர்த்து குழந்தைகளுக்கு சாயங்காள சிற்றுண்டி தந்து பாருங்கள். அவ்வளவு ஆரோக்கியம்.

பழங்காலத்தில் இறக்கும் தருவாயில் இருக்கும் நபர்களுக்கு தேங்காய் பால் கொடுத்து, வாழ்நாட்களை நீட்டிப்பு செய்துள் ளார்கள், ஆனால் தற்போது அந்த வழக்கம் மாறி, இறக்கும் தருவாயில் உள்ளவர்களுக்கு பாக்கெட் பாலை ஊற்றி விரைவாக உயிர் பிரிய வைத்து விடுகின்றனர்.

தாய்ப்பாலுக்கு மாற்றாக, தேங்காய் பால் குழந்தைகளுக்கு கொடுத்து காப்பாற்றி இருக்கிறார்கள், ஆன இப்போது பாக்கெட் பால் கொடுத்து குழந்தைகளுக்கு பல்வேறு பக்க விளைவுகள் ஏற்படுத்தும் நோய்களை ஊட்டிக் கொண்டிருக்கின்றனர்.

காலையில் தேங்காயை துருவி அதனை அரைத்து பாலெடுத்து அதனுடன் நாட்டு சர்க்கரை அல்லது கருப்பட்டி அல்லது தேன் சேர்த்து பாக்கட் பாலைதவிர்த்து விட்டு அதற்கு பதிலாக தந்து பாருங்கள். குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பார்கள். பெண்களுக்கு இது மிகச் சிறந்த சத்துக் கலவையாக இருக்கும்.

பிறந்த குழந்தைளுக்கு அவசியம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறுவதன் காரணம் தாய்ப்பாலில் இருக்கும் மோனோலாரின் சக்தி குழந்தைகளுக்கு மிகவும் அவசியமாகும், ஆனால் இந்த மோனேலாரின் சக்தி தேங்காயில் கூட உள்ளது. தேங்காயைத் தவிர மற்ற எதிலும் இந்த மோனேலாரின் சக்தி கிடையாது.



GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

# தியானம் யோகியை உருவாக்குகிறது

56 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "இறைவனைக் காண்பதற்கு ஒருவர், தினசரி காலையும் இரவும் மற்றும் நாள் முழுவதிலும் எப்பொழுதாவது கிடைக்கும் சிறிது ஓய்வு நேரத்திலும் தியானம் செய்ய வேண்டும். அத்துடன் வாரத்தில் ஒரு நாள் ஆறுமணிநேரம் தியானம் செய்வது முக்கியமாகும். இது ஒன்றும் நியாயமற்றதல்ல. சில மனிதர்கள் பியானோ வாசிக்கும் பயிற்சியை வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் பத்து மணி நேரம் செய்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் எதுவும் நினைப்பதில்லை.

ஆன்மீக வல்லமை பெறுவதற்கு இறைவனுக்கு அதிக நேரம் கொடுப்பது அவசியம். நாம் வேறெதையும் விட இறைவனையேஅதிக நேரம் நேசிக்கிறோம் என்று அவனை நாம் உணரச்செய்ய வேண்டும். நீங்கள் தியானத் தில் அனுபவம் பெற்று உயர் உணர்வு நிலைக்கு ஆழ்ந்துபோக முடியும்பொழுது ஐந்து மணிநேரத்தூக்கம் போதுமானது. இரவின் மீதி நேரம் தியானத்திற்காகப் பயன்படுத்தவேண்டும். இறைவன்மீது தியானம் செய்வதற்கு ஒருவர் இரவுகள், அதிகாலைகள், மற்றும் விடுமுறை நாட்கள் பயன்படுத்தலாம். இந்த முறையில் எவ ரும் மும்முரமாக உள்ள மேலைநாட்டவர்கூட, ஒரு யோகி ஆகலாம். எனவே, ஒரு மேலைநாட்டு யோகி ஆகுங்கள். நீங்கள் என்னைப்போன்று ஒரு தலைப்பாகை அணியவோ அல்லது நீளமுடியை வைத்துக்கொள்ளவோ அவசியமில்லை".

"என்னுடைய மிகப்பெரிய விருப்பம், மனித ஆன்மாக்களில் இறைவனது திருக்கோயில்களைக் கட்டுவதாகும், மனிதர்களின் முகங்களில் இறைவனது புன்னகையைக் காண்பது ஆகும். வாழ்க்கையின் எல்லா சாதனைகளிலும் மிக முக்கியமானது ஒருவனுடைய சொந்த ஆன்மாவில் இறைவனது திருக்கோயிலை நிறுவுவதுதான். மேலும் இது எளிதாகச் செய்யக் கூடியது, இதனால்தான் ஸெல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோஷிப் மேலை நாட்டிற்கு அனுப்பப்பட்டது".

"தனது ஆன்ம கோவிலில் இறைவனை நிர்மாணித்த எவரும் ஒரு யோகியாவார். அவர் என்னுடன் சேர்ந்து, யோகமானது, கிழக்கு, வடக்கு, தெற்கு, மேலும் மேற்கிலும் உள்ள எல்லா மக்களுக்காகவும் ஆனது என்றும். அவர்கள் மத சாஸ்திரங்களின் கிளைச் சாலைகளைப் பின்பற்றி, யோகத்தின் நெடுஞ் சாலையில் இணையலாம் என்றும் கூறலாம். சரியான மார்க்கம் இறைவனுடைய பேரானந்த அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறது; அங்கு சென்றடைந்த ஒருவர், " அதனின்று ஒருக்காலும் நீங்குவதில்லை."

தியானம் அறியாமை எனும் மூடுபனியை விலக்குகிறது.

குருதேவர் மேலும் அருளுகிறார்: "வியாச முனிவர் அருளிய பகவத் கீதையில் கண்ணபிரான், உங்களுடைய உள்ளார்ந்த அறிவு, அறியாமையால் மறைக்கப்பட்டிருந்தால், நீங்கள் மாயையில் சிக் குண்டு வாழ்க்கையில் தடுமாறுகிறீர்கள் என விளக்குகிறான்." ஒருவரது ஆற்றலின் அளவைத் தெரிந்துகொள்ளாமல், தனக்கே நேரும் ஆரோக்கியம் செல்வம் மற்றும் செல்வாக்கு ஆகிய இழப்பு மற்றும் அதனால் மற்றவர்களுக்கு விளையும் தீமை போன்ற விளைவுகளை அலட்சியம் செய்து மாயையினால் தொடங்கப்படும் செயலானது தாமஸ (அறியாமை) வினை எனப்படும். (பகவத் கீதா அத். 18 ஸ்லோகம் 25) அறியாமை எனும் மூடுப்பனி தியானத்தால் விலக்கப்படும்பொழுது, நீங்கள் சரியான மார்க்கத்தைக் காண்பீர்கள். அதன் பின்னர் நீங்கள் துன்பப்பட மாட்டீர்கள்; நீங்கள் நிரந்தரமான நிறைவைக் காண்பீர்கள். "உண்மையாகவே ஞானத்திற்குச் சமமானது இவ்வுலகில் ஏதுவுமில்லை. காலப்போக்கில் யோகத்தில் (தியானத்தில்) வெற்றியடைந்த பக்தன் தன் ஆத்மாவில் இதைத் தானாகவே உணர்கிறான். (பகவத் கீதா அத் 4 ஸ்லோகம் 38) இந்த உண்மைகள் அனைத்தும் என்னால் உண்மையில் உணரப்பட்டவை. மெய்பொருளே உண்மை. சத்தியம்தான் மெய்ம்மையானது. ஆத்ம அனுபூதி என்பது ஒருவர் புத்தகங்களிலிருந்து கற் றுக் கொள்ளக்கூடிய ஏதோ ஒன்றல்ல; அது சொந்த அனுபவத்தின் மூலமாகவே வருவதாகும்".

யத: ப்ரவ்ருத்திர் பூதானாம்
யேன ஸர்வமிதம் ததம்
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய
ஸித்திம் விந்ததி மானவ : (கீதா அத் 18 ஸ்லோகம் 46)

பொருள்: ஒரு தந்தைக்கு நான்கு புதல்வர்கள் இருக்கிறார்கள்



என்று வைத்துக்கொள்வோம். தந்தை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணியை செய்யும்படி பணிகளை ஒப்படைத்தார் என்று வைத்துக்கொள்வோம். பணிகள் பெரிது, சிறிது என்ற வித்தியாசம் இருந்தாலும், தங்களுக்குக் கொடுத்த பணிகைளை நன்றாகச் செய்தால் தந்தை நால்வரிலும் சமமாக ப்ரீதியுள்ளவனாவான். அப்பொழுது தந்தை தன் புதல்வர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார். அதுபோலவே எதனால் இந்த முழு பிரபஞ்சமும் ஊடுருவப்பட்டிருக்கிறதோ அந்த பரமாத்மாவைக் குறிக்கோளாகக் கொண்டு அவருடைய ப்ரீதிக்காகவே பூஜையாகத் தங்களுடைய வருணத்திற்கேற்றவாறு கர்மங்கள் செய்யப் படட்டும். இதில் ஒவ்வொரு மனிதனுக்கும் (மனித மாத்திரத்திற்கு) அதிகாரம் உண்டு. தேவர்கள், அசுரர்கள், மிருகங்கள், பக்ஷிகளுக்குதாமாக அதிகாரம் கிடையாது. ஆனாலும் அவர்களுக்கும் பரமாத்மாவின் பக்கத்திலிருந்து தடையும் கிடையாது. எல்லோரும் பரமாத்மாவின் அம்சம் ஆகையினால் பரமாத் மாவை அடைவதில் எல்லோருக்கும் உரிமை உண்டு. ஒவ்வொரு பிராணிக்கும் பகவான்மேல் உரிமை இருக்கிறது. இதிலிருந்து பரஸ்பர விவகாரத்தில் அதாவது உணவு, விவாகம் முதலிய உடல் சம்மந்தப்பட்ட செயல்களில் பிறப்புக்கு முக்கியத்துவம் இருக்கிறது.

பரமாத்மாவை அடைவதில் எண்ணம், விவேகம், கர்மம் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. பரமாத்மாவிற்கு மனிதன் செய்யும் பூஜை என்னவெனில் அவனுக்கு ஏற்பட்ட பணிகளை ஒழுங்காகச் செய்து வருவதுதான். அதன் மூலமே மனிதன் காரியசித்தி அடைகிறான். அதாவது பரமாத் மாவுடன் இணைகிறான். இதுவே மேற்கண்ட ஸ்லோகத்தின் சாரம்.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனுக்கும் அதாவது பிறவிகளில் செய்வதற்கென்று பணிகளைத் தந்துள்ளான் இறைவன். இறைவன் தந்த பணிகள் நல்லதோ, கெட்டதோ, சிறிதோ பெரிதோ லாபம் உள்ளதோ நஷ்டம் அடையக்கூடியதோ ஆகிய, இவ்வுலகில் வாழும்போது செய்யக்கூடிய இறைவனிட்ட பணிகளை செவ்வனே செய்தால் இறைவன் மகிழ்வான். இறைவன் மகிழ்ந்தால் அவனிட்ட பணிகளைச் செய்தவன்மேல் ப்ரீதனாகி அவனுக்கு வேண்டியதை அருள்வான்.

ஒருவனுக்குக் குடும்பத்தை பராமரிக்கும் பணியை தருவான். மற்றொருவனுக்கு அரசுபணி யை அளிப்பான். மேலும் ஒருவனுக்கு இரண்டு பணிகளையும் அளிப்பான். ஒருவனுக்கு தன்னைப் (இறைவனை) பற்றி எழுதும்படி அருள்வான். ஒருவனுக்கு டாக்டர் பணி, அரசியல், கூலிப்பணி, இது போன்று பல்வேறு பணிகளை இறைவன் இவ்வுலக மக்களுக்கு அருளியுள்ளான்.

இறைவன் தமக்கு எதற்காக இப்பணிகளை அளித்திருக்கிறார் என்பதை உணர்ந்தறிந்து பலனை எதிர்பாராமல் பணிகளைச் செய்வதே விவேகமாகும். பலனை இறைவன் அருள்வான். “கடமையைச் செய்வதே நமது குறிக்கோள்: கடமையின் பலனை இறைவனே அருள்வான்” என்ற ஒரு பாடல்கூட இருக்கிறது, இவ்வுலகில் இறைவனின் சிந்தனையுடன் வாழ்வதும் இறைவனுக்காகப் பணிகளைச் செய்வதும்தான் வாழ்க்கையின் ரகசியம் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். இந்த இரகசியத்தை அறிபவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள் என்று கருதவேண்டும். உண்மையும் அதுவே. அது எல்லோரும் ஆரம்பத்திலே அறிய இயலாது. ‘இறைவனைக் காணவேண்டும்’ என்ற தேடுதல் இருப்பவர்கள், எந்த நூலில் இதன் பதில் இருக்கும் என்று ஒவ்வொரு நூலினை (மகான்களின் நூல்கள்) தேடிப் பெற்று படிப்பார்கள். அந்த உன்னதமான தேடுதலை உடையவர்களுக்கு நூலும் கிடைக்கும்; கேள்விக்குப் பதிலும் கிடைக்கும். அவ்வாறான பதில் கிடைப்பதற்குக் காரணம் இறைவனை நேசிப்பதாலும் அவனுக்கு நிபந்தனையற்ற அன்பைக் கொடுப்பதாலும்தான்.

ஒரு மனிதனுக்கு, மேலே கூறப்பட்டுள்ள குணம் இருந்தால் நிச்சயம் அந்த மனிதன் தியானம் செய்வான். தியானத்தால் மட்டும்தான் இறைவனை அடையமுடியும் என்பதை அவனுக்கு இறைவன் உணர்த்துவான். நாட்கள் செல்லச் செல்ல எல்லாவற்றையும் உணர்த்தத் தொடங்குவான் இறைவன். நிபந்தனையற்ற தன் அன்பைக் கொடுக்க யாரும் வரமாட்டார்களா என்று ஏங்கித்தவித்துக்கொண்டிருக்கும் இறைவன், யாராவது வருவார்களா என்ற எதிர்பார்ப்புடன் இருப்பான். அதனால்தான் நாம் ஓர் அடி வைத்தால் அவன் பத்து அடி வைத்து நம்மிடம் வருவான் என்பர். கஷ்டில்லாத கருணை உள்ளம் கொண்டவனல்லவா இறைவன்! ஆகையால் அப்படித்தான் இருப்பான். அதற்குமேலாக இறைவனின் குழந்தையாகின்ற மனிதனும் இறைவனை அறியவேண்டும் என்ற வைராக்கியத்தில் ஏக்கமுடன் இருப்பான்.

> **“**
> **இறைவன் தமக்கு எதற்காக இப்பணிகளை அளித்திருக்கிறார் என்பதை உணர்ந்தறிந்து பலனை எதிர்பாராமல் பணிகளைச் செய்வதே விவேகமாகும். பலனை இறைவன் அருள்வான்**

யோ மாமேவமஸம் மூடோ ஜானாதி புருஷோத்தமம்
ஸ ஸர்வவில் பஜதி மாம் ஸர்வ பாவேனபாரத.

“எவனொருவன் மாயையிலிருந்து விடு பட்டு என்னை மேலான மெய்ப்பொருளாகத் தெரிந்துகொள்கிறானோ, அவன் சகலமும் தெரிந்த வனாகிறான். அவன் தன் முழு இருப்புடன் என்னை வழிபடுகிறான்”. (பகவத் கீதா அத்15 ஸ்லோகம்19.)

பகவான் கிருஷ்ணன் அருளியுள்ளவாறான ஒருவன் இவ்வுலகப்பொருட்கள் யாவற்றையும், மிக விலை உயர்ந்த பொருளாக இருந்தாலும் விலை மதிக்கமாட்டான். அவற்றையெல்லாம் குப்பைக்கு சமமாக கருதுவான். அவனுடைய இதயத்திலும் மற்றவர்களுள்ளும் ஒளிர்ந்துகொண்டிருக்கும் இறைவன் மட்டும்தான் மேலான பொருளாகக் கருதுவான்.

அப்படிப்பட்ட இறைவனை மட்டும்தான் நேசிப்பான் அவனிடத்தில் மட்டும்தான் விசுவாசம் கொள்ளுவான்; அவனுடன் மட்டும்தான் தொடர்பு கொள்ள வேண்டும் என்று எண்ணுவான். அவனுடைய அந்த எண்ணத்திற்கேற்றவாறு இறைவனும் அவனுக்கு அருள்புரிவான். இறைவன் ’தன்னையே’ தன் பக்தனுக்கு பரிசாக வழங்குவான். பாக்கியசாலியாக இருக்கும் அந்த பக்தனுக்கு இதற்குமேல் என்ன வேண்டும்? ஆம்! அவன் பரம பாக்கியசாலிதான்! இப்படிப்பட்ட, பிரபஞ்சத்தின் தந்தையான இறைவனை மனிதனாகப் பிறந்த அத்துனை பேர்களும் தேட வேண்டியது மிகவும் அவசியம் அல்லவா! நமக்கு எல்லாமாக இருக்கும் இறைவனைத் தேடும் பணியைத் துவக்க அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும் என்று இறைவனிடத்தில் வேண்டிக்கொள்வது மிகவும் அவசியம். தேட ஆரம்பித்தாலே இறைவனும் குருதேவரும் கருணை கூர்ந்து வழிகாட்டுவர். ஆத்மார்த்தமாகத் தேடினால் இறைவனைக் கண்டுபிடிக்கலாம்: இறைவனின் சாம்ராஜியத்திற்குச் செல்லலாம். இறைவனின் அரண்மனை வாசலை நமக்காக அவன் திறந்துவைப்பான்; தானாகத் திறக்கப்படும். இறைவனைத் தேடுபவர் ஒரே குறிக்கோளுடன் இருக்கவேண்டும். அன்றாடப் பணிகளைச் செய்யும்போது இறைவனின் சாம்ராஜியத்தில் அவனுடன் இருக்க வேண்டும். பேசும்போதும் சிந்தனை செய்யும்போதும் அவனுடைய சாம்ராஜியத்தில் அவனுடன் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கையில் நமது அன்றாடப்பணிகளும் சீராக அமையும். அவற்றை செவ்வனே செய்யவும் இயலும். அப்பொழுது அவனுடைய கருணையினால் நாம் அனைவரும் அவனுடைய பாதுகாப்பில் மிகத் தெளிவாக இருக்க முடியும். எல்லாம் இறைவனே செய்யவைப்பதுதான். அதையும் நாம் புரிந்துகொள்ள முடியும்; அவனே புரிய வைப்பான். புரிய வைப்பது மட்டுமின்றி தன் பக்தனை யோகியாக மாற்றுவான். இப்படிப்பட்ட இறைவனிடத்தில் நம்மையும் நம் உடமைகள் அனைத்தையும் சமர்ப்பணம் செய்து, நாம் அவனிடத்தில் சரணைடைந்துவிட்டு நிம்மதியாக வாழ வேண்டும். அதன் பிறகு எல்லாம் இறைவனே பார்த்துக்கொள்வான். எதிலிருந்து கர்மஸ் வரூபமாகிய இந்த லௌகீக வாழ்க்கை ஆரம்பித்துள்ளதோ, எங்கும் நிறைந்துள்ள சைதன்யம் வித்தியாசமான கர்மங்கள் மற்றும் அனுபவங்களை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளதோ அல்லது உபாதிகளும் கர்மங்களும் அனுபவங்களுமெல்லாம் எதில் இடைவிடாமல் ஒன்றிணைத்துள்ளதோ அந்த சைதன்யத்தை அல்லது எங்கும் நிறைந்துள்ள பரப்பிரம்மமாகின்ற இறைவனைப்பொறுத்தவரையில் அனைத்து கர்மங்களும் சமமாகின்றன. எனவே மனிதனாகப் பிறந்தவர்களே! உங்கள் மனமாகின்ற கப்பலுக்கு தியானமெனும் நங்கூரத்தை இறைவனாகின்ற மகா சமுத்திரத்தில் இடுங்கள்!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# பக்தியில் நமது நிலை

பக்திக்கு கடவுளை உபயோகப்படுத்திக் கொள்ளாத இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் பக்தி மார்க்கத்தில் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா?

படிக்க ஆரம்பிக்கும் குழந்தைகளுக்கு எல்.கே.ஜி., யு.கே.ஜி., வகுப்புகள் உண்டு. இந்த வகுப்புகளில் குழந்தைகளுக்கு மிகச் சிறிய அளவில் படிப்பு, அதிக அளவில் விளையாட்டு, சிறிது தூக்கம்.. இவைகளே கற்பிக்கப்படுகின்றன.

இந்த அளவிலாவது பக்தர்களுக்கு கோயில், குளம், பூஜை, வழிபாடு, இவைகள் இருக்கின்றனவா? என்று கேட்டால், இல்லை என்றே தெரிகின்றது. மறுபடியும் சிந்தியுங்கள் பக்தர்களே! சிறு பிள்ளைகளுக்கு எல்.கே.ஜி வகுப்புகளுக்கு முன் 'க்ரெச்' என்ற வகுப்பு இருக்கிறது. இன்று நாட்டில் கணவனும் வேலைக்குச் செல்கிறான். மனைவியும் வேலைக்குச் செல்கிறாள். அவர் களுக்குப் பிறந்த குழந்தையை கவனித்துக் கொள்ள எவருமே இருப்பதில்லை.

அந்த சமயத்தில் பெற்றோர்கள் மூன்று வயது, நான்கு வயது ஆன குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் சேர்த்து 'க்ரெச்' வகுப்பில் போட்டுவிடுகிறார்கள். இங்கு தாதிமார்கள் என்னும் ஸ்கூல் ஆயாக்கள் க்ரெச் குழந்தைகளுக்கு புட்டிப்பால் ஊட்டி தூங்கச் செய்து, பொம்மையைக் காட்டி விளையாட வைத்து, மலம், மூத்திரம் துடைத்து மாலையில் வீட்டுக்கு அனுப்புகிறார்கள்.

பக்தி மார்க்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் நாட்டு மக்கள் இன்று இந்த க்ரெச் நிலையில் வாழுகிறார்கள் என்பது உண்மை. வெட்கித் தலை குனிய வேண்டிய பக்தர்களே! இனியாவது மேலே செல்லுங்கள். இனியாவது கடவுளை எண்ணி கடவுளைப் பற்றி மட்டுமே பேசுங்கள்.

இதன் பின் மனம் மாறாமல் நீ இருந்தால் உன்னை நீ இந்த என்று அழைத்துக் கொண்டால், மற்றபடி எப்படிச் சொன்னாலும் என்ன லாபம்? லாபம் ஒன்றுமில்லை. நஷ்டமே..

உலகில் இந்து சமயம் ஒன்றே கடவுளுக்கு உருவம் உண்டு என்று சொல்லி உரு வழிபாட்டை மக்களிடம் வைத்துள்ளது. இது உண்மையே என்றாலும் உண்மையா. என்பதைப் பிறகு ஆராய்வோம்.

சகுணப் பிரும்மம் என்ற உருவ வழிபாட்டை வடமொழிப் புத்தகங்களும் தமிழ் நூல்களும் கடவுளின் அங்க முகங்களையே வருணித்து பெருமைப்பட துதித்து வருகின்றன. இதன் பொருள் என்ன தெரியுமா? உலகெங்கிலும் உள்ள பக்தர்கள் இன்னமும் பக்தி துறையில் எல்.கே.ஜி. வகுப்பில் கூட இல்லை. க்ரெச் வகுப்பில் உள்ள குழந்தையைப் போன்றே இருக்கின்றனர்.

இந்த நிலையை எண்ணி பக்தி மார்க்கத்தில் விரைவில் நுழையுங்கள்.

சாத்திரத்தை மட்டும் உணர்வது, தருமங்களை மட்டும் கேட்பது பள்ளிக்கூடத்தில் சிறிய குழந்தைகள் பெய்யும் மலஜலங்களைத் துடைப்பதற்கு ஒப்பாகும். அங்கு குழந்தைகள் தூங்குகின்ற உதாரணம் இன்று பக்தன் உணர முடியாமல் செய்யும் பூஜை வழிபாடுகளுக்கு சமமமாகும். உருவ விக்கிரங்களைப் பார்த்து பக்தி செய்யக் கஷ்டப்படுவது, 'க்ரெச்' வகுப்பில் நடத்தும் விளையாட்டுக்களே.

சீக்கிரம் முன்னேறு. இப்படி இருந்தால் என்ன செய்வது?

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028



• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கலச பூஜை சிறப்பு

கலசம் என்பது கும்பம். கும்பத்தில் நீர் நிரப்பி ஒரு தேங்காயை வைத்து கும்பத்தை சுற்றி நூல்களால் கட்டப்படும் புனித கும்பமே கலசம். இந்த நீருக்கு அதிக சக்தி உண்டு.

கங்கையின் புனிதம் நிறைந்த நீர் போல் இந்த கலசத்தில்இருக்கும்நீருக்கு புனிதம் அதிகமாகும். கலசத்தை பூஜிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அதை பற்றி தெரிந்துக்கொள்வோம்.

விஷ்ணுவின் நாபிக் கமலத்திலிருந்து ஒரு தாமரை வெளிப்பட்டது. அந்த மலரிலிருந்து படைப்புக் கடவுளான பிரம்மா தோன்றினார். பிரம்மாவே உலகத்தை சிருஷ்டித்தார்.

கலசத்தில் உள்ள புனித நீரானது அனைத்திற்கும் உயிர் அளிக்கும் சக்தி படைத்தது. இந்த நீர் எண்ணிலடங்கா உருவங்களையும், வடிவங்களையும் உயிர்த் துடிப்பும், உணர்வும் உள்ள பொருள்கள் மற்றும் ஜடப் பொருள்கள் ஆகிய அனைத்தையும் படைக்கும் சக்தியை தன்னுள் அடக்கியுள்ளது.

கலசத்தில் உள்ள இலைகளும், தேங்காயும் சிருஷ்டியைக் குறிக்கின்றன. கலசத்தைச் சுற்றியுள்ள நூல் படைப்பில் உள்ள அனைத்தையும் ஒன்றாகப் பிணைக்கும் அன்பைக் குறிக்கிறது. ஆகவேதான் கலசம் புனிதமாகக் கருதப்பட்டு பூஜிக்கப்படுகிறது.

புனிதமான நதிகளின் நீர், அனைத்து வேதங்களின் சாரம் மற்றும் அனைத்து தேவதைகளின் ஆசி ஆகியவை கலசத்தில் உள்ள நீரில் வந்து சேரவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது. பின்னர், கலச நீர் அபிஷேகத்திற்கும் மற்ற சடங்குகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலசத்தில் உள்ள புனித நீர் ஆலய கோபுரக் கலசங்களின் மேல் ஊற்றப்படுகிறது.

அசுரர்களும், தேவர்களும் பாற்கடலைக் கடந்தபோது, அமுத கலசத்தை ஏந்தியவாறு இறைவன் தோன்றினார். இவ்வமுதம் அனைவருக்கும் இறவாவரத்தை அருளியது.

இந்த அற்புத நீர் நம் மீது படும்போது நமது ஆயுள் நீடிக்கும் ஆரோக்கியம் கூடும் என்பது ஐதீகம்.

நாம் செய்யும் அனைத்து நல்ல காரியங்கள், விசேஷங்கள் சிறப்புற நடைபெற கலசம் வைத்து அதில் நாம் வணங்கும் தெய்வத்தை ஆவாகரணம் செய்து வழிபடுவது இந்துக்கள் செய்யக்கூடிய ஒன்றாகும்.

## கலசம் என்பது என்ன?

மண் அல்லது செம்பு, பித்தளை, தாமிரம் வெள்ளி போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட நீர் நிறைந்த ஒரு பாத்திரம் செம்பு சிறு பானை தான் கலசம் எனப்படுகிறது.

இந்த கலசத்தில் மாவிலைகள் செருகப்பட்டு நடுவில் ஒரு தேங்காய் வைக்கப்படும். வெண்மை அல்லது சிவப்பு நிறமுள்ள நூல்கள் பானையின் கழுத்திலிருந்து முழுமையாக டயமண்ட் வடிவத்தை உருவாக்கும் வகையில் நுணுக்கமாக கட்டப்படுகிறது .பானையின் மேல் அழகான லக்ஷ்மி தேவியின் உருவத்தை வரைவது உண்டு. இந்த பானை கலசம் என்றழைக்கப்படுகிறது.

## பூரண கும்பம்

கலத்தில் நீரோ அல்லது அரிசியோ நிரப்பப்படும். இதற்கு பூரண கும்பம் என்றழைக்கப்படுகிறது.

கிரக பிரவேசம்,திருமணம்,விரத நாட்களில் கலசம் வைத்து வழிபடுவார்கள். மேலும் விழா நடத்தப்படும் இடத்தின் நுழைவாயிலில், வருவோரை வரவேற்கும் வகையில் இக்கலசம் வைக்கப்படுகிறது.



கலசம் வைத்து பூஜிப்பது ஏன்?

உலகை படைக்கும் முன் விஷ்ணு, பாற்கடலில் பாம்பணையின் மேல் சாய்ந்து அமர்ந்திருந்தார்.அவருடைய நாபிக் கமலத்திலிருந்து ஒரு தாமரை வெளிப்பட்டது.அந்த மலரிலிருந்து படைக்கும் கடவுளான பிரம்மதேவன் தோன்றினார்.பிரம்மாவே உலகத்தை சிருஷ்டித்தார்.

கலசத்தில் உள்ள நீரானது ,எந்த நீரிலிருந்து படைப்பில் உள்ள அனைத்தும் தோன்றி யதோ,அந்த நீரைக் குறிக்கும்.அந்த புனித நீர்தான் அனைத்திற்கும் உயிர் அளிக்கும் சக்தி படைத்தது. இந்த நீர் எண்ணிலடங்கா உருவில்,வடிவில்,உயிர்த்துடிப்பும் உணர்வும் உள்ள பொருள்கள் மற்றும் ஜடப் பொருள்கள் ஆகிய அனைத்தையும் படைக்கும் சக்தியைத் தன்னுள் அடக்கியுள்ளது.

மேலும் உலகிலுள்ள மங்களமான அனைத்தையும் படைக்கும் சக்தி பெற்றது.கலசத்தில் வைக்கப்படும் மாவிலைகளும், தேங்காயும் சிருஷ்டியைக் குறிக்கும்.கலசத்தில் சுற்றிய நூல் படைப்பில் உள்ள அனைத்தையும் ஒன்றாக பிணைக்கும் அன்பைக் குறிக்கிறது. ஆகவேதான் கலசம் புனிதமாக கருதி பூஜிக்கப்படுகிறது.

புனிதமான நதிகளின் நீர் அனைத்தும் வேதங்களின் சாரம் மற்றும் அனைத்து தேவதைகளின் ஆசி கலசத்தில் உள்ள நீரில் வந்து சேர வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். பின்னர் பூஜைகள் முடிந்தவுடன்,நம் வீட்டில் உள்ள எல்லா இடங்களிலும் புனித நீராக தெளிக்கப்படுகிறது.

ஆலய கும்பாபிஷேகங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலசத்தில் உள்ள புனித நீரை ஆலய கோபுர கலசங்களின் மேல் ஊற்றப்படுகிறது.

நிறைகுடம் என்பது தமிழர் கலாசார அடையாளங்களில் ஒன்றாகும். தமிழரின் மங்கலப் பொருட்களுள் ஒன்றாக இது அமைகின்றது. நிறைவான குடம் எனும் பொருளில் நிறைகுடம் எனப்படுகின்றது. முழுமையாக நீர் நிறைந்த கலசத்தில் மாவிலைகளைச் சொருகி அதன்மேல் முடி நன்கு சீவப்பட்ட தேங்காய் வைக்கப்படும். இதனோடு


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

குத்துவிளக்கு, ஊதுபத்தி, திருநீறு, சந்தனம், குங்குமம் முதலிய மங்கலப் பொருட்களும் வைக்கப்பட்டு இவை யாவும் அரிசி அல்லது நெல் பரவிய வாழை இலையின் மேல் வைக்கப்படும்.

சைவத் தமிழ் மக்கள்; தங்கள் கலை, கலாச்சார, சமூக நிகழ்வுகளின் போதும், விசேஷ பண்டிகை கொண்டாட்டங்களின் போதும், சுபமங்கள சடங்குகள் நடைபெறும் போதும் நிறை குடம் வைத்து வரவேற்பதும், ஆராத்தி செய்வதும் ஆகம மரபு வழி வந்த வழக்கமாகும்.

சுப நாட்களில் வீட்டு வாசலில் நிறை குடம் வைப்பதன் மூலம் சகல செல்வங்களும் வீட்டில் நிரம்பப்பெற்று இருக்கும் எனவும் இதை மங்களத்தின் அறிகுறியாக இந்துக்கள் போற்று கின்றார்கள். அத்துடன் நிறைகுடம் வைக்கும் இடத்தில் இலக்குமி வாசம் செய்வாள் (வருகை தருவாள்) என்பதும் இந்துக்களின் நம்பிக்கை.

## நிறைகுடம் வைக்கத் தேவையான பொருட்கள்

1. நிறை குடம் (நீர் நிறைத்த குடம்)
2. சாணம் அல்லது மஞ்சளினால் செய்த பிள்ளையார் அல்லது பிள்ளையார் சிலை.
3. நெல் அல்லது பச்சரிசி
4. தலை வாழையிலை
5. முடித் தேங்காய் 1
6. மாவிலை 5 அல்லது 7
7. குத்து விளக்கு 2
8. தேங்காய் எண்ணெய்
9. விளக்குத் திரி
10. விபூதி + கிண்ணம்
11. சந்தனம் + கிண்ணம்
12. குங்குமம் + கிண்ணம்
13. பன்னீர் + செம்பு
14. பலநிறப் பூக்கள்
15. வாழைப்பழம் ஒரு சீப்பு
16. தேங்காகாய் ரூ 1 உடைப்பதற்கு
17. வெற்றிலை 3
18. பாக்கு 3
19. சாம்பிராணி

## நிறைகுடம் வைத்தல்

ஒரு மேசையைச் சுத்தம் செய்து, அதன்மீது சுத்தமான விரிப்பொன்றை விரிக்கவும். அதன்பின் அதன்மீது ஒரு தலைவாழை இலையை இலையின் நுனிப்பகுதி வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ அமையுமாறு வைக்கவும். இம் முறை அவ்விடத்திற்கு பொருந்தாவிட்டால், பொதுவாக வரவேற்பு நிகழ்வாக இருந்தால் வருபவர்களுக்கு வலப்பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்கக் கூடியதாக வாழை இலையை வைக்கவும்.

அதன் மேல் நெல் அல்லது அரிசி பரப்பி அதன்மேல் நீர் நிரப்பிய பித்தளை அல்லது சில்வரினால் ஆன கும்ப குடத்தை வைக்கவும். அதன் இரு பக்கங்களிலும் குத்துவிளக்கு ஒவ்வொன்று வைக்கவும். அதன் பின் ஐந்து மாவிலைகளை குடத்தின் வாயில் வைத்து சுத்தம் செய்து வைத்த முடித்தேங்காயை அதன் மேல் வைக்கவும், அமங்கல கிரியைகளுக்கு கும்பம் வைக்கும் போது மாத்திரம் மூன்று மாவிலைகள் வைப்பார்கள்.

ஒரு தட்டில் வாழைப்பழச்சீப்பு ஒன்றும், வெற்றிலைபாக்கு (வெற்றிலை ஒற்றைவிழும் எண்ணில்), தேசிக்காய் ஒன்றும்(வைக்கலாம் அல்லது தவிர்க்கலாம்) கும்பத்தின் இடது பக்கத்தில் வைத்து அதனுள் மஞ்சளினால் செய்த பிள்ளையார் அல்லது சிறிய பிள்ளையார் சிலையையும் வைக்கவும்.

இன்னொரு தட்டத்தில் அல்லது தட்டில் சந்தனம், குங்குமம், பன்னீர்ச்செம்பு, விபூதி வைத்து வலப்பக்கத்தில் வைக்கவும். நிறைகுடத் திற்கு ஒரு மாலையும் போடலாம். அல்லது பூக்களினால் அலங்கரிக்கலாம். குத்து விளக்குகளிற்கும் பூக்கள் வைக்கலாம்.

நிகழ்வு ஆரம்பமாவதற்கு முதல் இரண்டு குத்து விளக்குகளிலும் திரிகளில் ஒவ்வொன்றையோ அல்லது ஐந்தையுமோ கொழுத்தி விடவும். ஒரு தேங்காயை உடைத்து கும்பத்தின் இரு பக்கங்களிலும் வைக்கவும். அத்துடன் தூபம் ஏற்றுதல் வேண்டும். ஒன்று அல்லது மூன்று சாம்பிராணிக் குச்சிகளைக் கொழுத்தி வாழைப் பழத்தில் குத்தி விடலாம்.

## ஆராத்தி எடுத்தல்:

மங்கள காரியங்களிற்கு ஆராத்தி எடுக்கும் போது சுமங்கலிப் பெண்கள் இருவர் கும்பத்திற்கு முன்னால் நின்று ஆராத்திக்குரியவரை கும்பத் தை பார்த்துக் கொண்டு நிற்கச் செய்து ஆராத் திக்கு உரியவரின் கீழ்ப் பக்கத்தில் ஆராத்தித் தட்டை வலது, இடது பக்கமாக மூன்று முறை ஆட்டி அதன்பின் ஆராத்திக் குரியவரின் வலது பக்கமாக மேலே உயர்த்தி இடது பக்கத்தால் கீழே இறக்கி மீண்டும் கீழே மூன்று முறை ஆட்டி





திரும்பவும் இவ்வாறு மூன்று முறை செய்யவும்.

மூன்றாவது சுற்று இறுதியில் ஆராத்தித் தட்டை நடுவே கொண்டு வந்து திரி ஆராத்தியாயின் அவற்றை தட்டில்லுள்ள மஞ் சள்குங்கும கலவையில் அமிழ்த்தி நூர்த்தபின் திரிக் கரியுடன் சேர்ந்த மஞ்சளைகுங்குமத்தை ஆராத்திக் குரியவரின் நெற்றியில் திலகமாக இட்டு திஷ்டி கழிக்க வேண்டும். இதனை ஆராத்தி எடுத்த சுமங்கலிப் பெண்கள் இருவரும் செய்தல் வேண்டும்.

அமங்கல கிரியைகளுக்கு மாத்திரம் உரியவருக்கு இடது பக்கமாக உயர்த்தி ஆராத்தி செய்வார்கள்.

## மாவிலை கட்டுதல்:

மங்கள் வைபவங்களுக்கு பந்தலில் மாவிலை கட்டும்போது மாவிலையின் முன்பக்கத்திற்கு நூலை/கயிற்றை வைத்து முன்பக்கமாக மாவிலையை மடித்தல் வேண்டும்.

அமங்கல கிரியைகளின் போது மாத்திரம் மாவிலை பின்பக்கமாக மடிக்கப்படுகின்றது.

## பூரண கும்பம்

உலகமும் அதிலுள்ள தாவர சங்கமப் பொருள்களும் சகல ஆத்மாக்களும் நீரிலிருந்தே உண்டாகின்றன. மறுபடியும் பிரளய காலத்தில் தண்ணீரிலேயே லயமாகி விடுவதாக வேதம் கூறுகின்றது. ஆகையால் ஆதிகர்த்தாவாகிய இறைவன் நீரின்மூலம் உருவ வழிபாட்டுக்குக் கொண்டுவருவதே பூரண கும்பத்தின் அர்த்தம்.

இப் பூரண கும்பத்தை மனித உடலாக பாவித்து அதில் இறைவனை தியான, ஜப, பிரார்தனையின்மூலம் யாக சாலையில் வைத்து யாகமும் பூஜைகளும் செய்யப்படுகின்றன. சக்தி வாய்ந்த ஸ்ரீ ஜாக்ஷரங்கள் கொண்ட மந்திரங்களில் கும்பநீர் சுத்தி செய்யப்பட்டு அதில் தெய்வ ஆவாகனம் செய்யப்படுகின்றது. இந்த நீர் கெடாதிருக்க, கராம்பு, ஜாதிக்காய், பச்சைக் கற்பூரம் , குங்குமப்பூ முதலிய திரையங்கள் சேர்க்கப்பட்டுகின்றன. அஷ்டலக்ஷ்மிகளின் கடாட்ஷம் நிறைந்திருக்க மாவிலைவைக்கப்படுகின்றது. தேங்காய், மஞ் சள், குங்குமம், பூ, தர்ப்பை, கூர்ச்சம், ஸ்வர்ணம், அக்ஷதை ஆகிய எட்டு மங்களப் பொருள்களால் கும்பம் அலங்கரிக்கப்படுகின்றது.

## கும்ப தத்துவம்

மங்கள காரியங்களுக்காக வைக்கப்படும் நிறைகுடத்தில் 5 மாவிலைகள் இடம் பெறுகின்றன. இவ் ஐந்து மாவிலைகளும் ஐம்புலன்களையும் நினைவு படுத்துவதாக அமைகின்றன. குடமும் நீரும் நமது உடலை நினைவு படுத்துவதாகும். நிறைகுடமாகிய பூரண கும்பத்தை ஒரு முழுமதியாக ஒப்பிட்டார் கம்பர். எப்படியிருப்பினும் மனித உடல் ஐம்புலன், சிரசு, இவறை அடக்கும் கருவியாக பூரணகும்பம் இடம்பெறுகின்றது. பூரண கும்பம் இல்லாத சடங்குகளே இல்லை என்றே கூறலாம். சைவத் தமிழ் மக்கள்; தங்கள் கலை, கலாச்சார, சமூக நிகழ்வுகளின் போதும், விசேஷ பண்டிகை கொண்டாட்டங்களின் போதும், சுபமங்கள சடங்குகள் நடைபெறும் போதும் நிறை குடம் வைத்து வரவேற்பதும், ஆராத்தி செய்வதும் ஆகம மரபு வழி வந்த வழக்கமாகும்.

கலசம் என்பது என்ன? மண் அல்லது செம்பு, பித்தளை, தாமிரம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட நீர் நிறைந்த ஒரு பாத்திரம் செம்பு சிறுபானைதான் கலசம் எனப்படுகிறது. இந்தக் கலசத்தில் மாவிலைகள் செருகப்பட்டு, அவற்றின் நடுவில் ஒரு தேங்காய் வைக்கப்படும். வெண்மை அல்லது சிவப்பு நிறமுள்ள நூல்கள் பானையின் கழுத்திலிருந்து முழுமையாக டயமண்ட் வடிவத்தை உரு வாக்கும் வகையில் நுணுக்கமாகக் கட்டப்படுகிறது. பானையின் மேல் அழகான வடிவங்கள் வரையப்படுவதும் உண்டு.

இந்தப் பானை கலசம் என்றழைக்கப்படுகிறது. இது நீரினாலோ அல்லது அரிசியினாலோ நிரப்பப்படும். இது பூர்ண கும்பம் என்றழைக் கப்படுகிறது. இது போன்றே ஜடப்பொருளான நமது உடல் தெய்வீகமான சக்தியால் உயிர்பெறும் பொழுது அற்புதமான, போற்றத்தக்க செயல்களை செய்யக்கூடியதாக மாறுகிறது. மரபுப்படி நடத்தப் பெறும் கிருகப் பிரவேசம், திருமணம், தினசரி பூஜைகள் போன்ற சமயங்களில் இத்த கைய கலசம் வைக்கப்படுகிறது.

## பூஜிப்பது ஏன்?

உலகைப் படைக்கும் முன் பகவான் விஷ்ணு, பாற்கடலில் பாம்பணையின் மேல் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்.

அவருடைய நாபிக் கமலத்திலிருந்து ஒரு தாமரை வெளிப்பட்டது. அந்த மலரிலிருந்து படைப்புக் கடவுளான பிரம்மா தோன்றினார். பிரம்மாவே உலகத்தை சிருஷ்டித்தார். கலசத்தில்

உள்ள நீரானது, எந்த நீரிலிருந்து படைப்பில் உள்ள அனைத்தும் தோன்றியதோ, அந்த நீரைக் குறிக்கிறது. அந்தப் புனித நீர்தான் அனைத்திற்கும் உயிர் அளிக்கும் சக்தி படைத்தது. இந்த நீர் எண்ணிலடங்கா உருவங்களையும் வடிவங்களையும் உயிர்த் துடிப்பும் உணர்வும் உள்ள பொருள்கள் மற்றும் ஜடப் பொருள்கள் ஆகிய அனைத்தையும் படைக்கும் சக்தியைத் தன்னுள் அடக்கியுள்ளது. மேலும், உலகில் உள்ள மங்களகரமான அனைத்தையும் படைக்கும் சக்தியையும் பெற்றது, இது.

கலசத்தில் உள்ள இலைகளும் தேங்காயும் சிருஷ்டியைக் குறிக்கின்றன. கலசத்தைச் சுற்றியுள்ள நூல் படைப்பில் உள்ள அனைத்தையும் ஒன்றாகப் பிணைக்கும் அன்பைக் குறிக்கிறது. ஆகவேதான் கலசம் புனிதமாகக் கருதப்பட்டு பூஜிக்கப்படுகிறது. புனிதமான நதிகளின் நீர், அனைத்து வேதங்களின் சாரம் மற்றும் அனைத்து தேவதைகளின் ஆசி ஆகியவை கலசத்தில் உள்ள நீரில் வந்து சேரவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது. பின்னர், கலச நீர் அபிஷேகத்திற்கும் மற்ற சடங்குகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஆலய கும்பாபிஷேகத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலசத்தில் உள்ள புனித நீர் ஆலய கோபுரக் கலசங்களின் மேல் ஊற்றப்படுகிறது. அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, அமுத கலசத்தை ஏந்தியவாறு இறைவன் தோன்றினார். இவ்வமுதம் அனைவருக்கும் இறவாவரத்தை அருளியது. எனவே, கலசமும் இறவாத் தன்மையைக் குறிக்கிறது. ஞானியர் என்போர் நிறை மனிதர்கள். இதற்குக் காரணம் அவர்கள் தங்களுடைய உண்மை சொரூபம், பூர்ணமான எங்கும் நிறைந்த பேருண்மையேயன்றி வேறில்லை என்பதை நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் என்றும் குறைவற்ற மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்து விளங்குகின்றனர். உலகில் உள்ள மங்களகரமான அனைத்தையும் குறிப்பவர்களாக அவர்கள் விளங்குகின்றனர். அந்த நிறை மனிதர்களின் பெருமையைப் போற்றும் வகையில் பூர்ணகும்பத்துடன் அவர்கள் வரவேற்கப்பட்டனர். இது அவர்களிடத்து நமக்கு உள்ள பக்தி நிறைந்த மரியாதையை நாம் முழுமனதுடன் வெளிப்படுத்துவதன் அடையாளமாகும்.

– நன்றி ஆன்மீக கல்வி



# ஷோடச கணபதி

16 வகை கணபதிகளையே ஷோடச கணபதி என்று அழைப்பார்கள்.

பாலகணபதி, தருணகணபதி, பக்த கணபதி, வீரகணபதி, சக்தி கண பதி, விஜயகணபதி, சித்திகணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்னராஜகணபதி, க்ஷிப்ரகணபதி, புவனேசகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்தவ கணபதி ஆகியவைகள்.

இந்த கணபதிகளை தினசரி காலை, மாலை வணங்கி வந்தால் நினைத்த காரியங் கள் வெற்றிபெறும்.

# சோம சூக்த பிரதட்சன முறை




ஒருகாலத்தில் வலுப்பெற்ற கொடிய ஆலகால விஷம் தேவர்களை குறைத்து துரத்த ஆரம்பித்தது.அதனால் பயமுற்ற அவர்கள் தப்பிக்கும் எண்ணமுடன் சர்வேசு வரனை சுற்றி வலமாக ஓடிவந்தனர், ஆனால் ஆலகால விஷமோ தேவர்களை இடப்பக்கம் வந்து எதிர்த்தது. அதனால் அரண்டு போன அவர்கள் அப்படியே திரும்பி இடப்பக்கம் திரும்பி வருகையில் ஆலகால விஷம் வலமாகவும் வந்து தேவர்களை எதிர்க்கத் தொடங்கிவிட்டது. ஆனால் சிவன் கருணையால் தேவர்கள் தப்பிப்பிழைத்தனர்.

அதனால் பிரதோஷ நன்னாளன்று சிவபிரானை வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் சுற்றும் சோமசூக்த பிரதட்சண வழிமுறை தோன்றியது.

# 16 வகைச் செல்வங்கள்

கலையாத கல்வி, குறையாத செல்வம், சலியாத மனம், அன்பான மனைவி, கீர்த்தி, உறுதியான வார்த்தை, நிதி, மாறாத கோல், இறைபக்தி, கபடு அற்ற நட்பு, பிணியற்ற உடல், சந்தான பாக்கியம், கொடை, துன்பமற்ற வாழ்க்கை, இவை அனைத்தும் அபிராமபட்டர் சுட்டிக்காட்டும் 16 வகையான செல்வங்களாகும்.

# தீப திரிக்கு தனித்தனி பலன்கள் உண்டு

பஞ்சுத்திரி வைத்து தீபமேற்ற
மேன்மை உண் டாகும்.
தாமரைத் தண்டு திரியினால்
பாவங்கள் அகலும்.
வாழைத்தண்டு திரி மூலம்
தெய்வ சாபம் போகும்.
எருக்கன் பட்டைத்திரி
துஷ்ட சக்திகளை விரட்டியடிக்கும்
மஞ்சள் துணி திரியால்
நோய்களை கோக்கிக் கொள்ளலாம்.
சிவப்புத் துணி திரியால்
திருமண யோகம் கிட்டும்
வெண்துணி திரி தரித்திரமின்றி சாக்கும்

# திருமலையின் வேறு பெயர்கள்

திருமலைத் தலத்தில் ஆதிசேஷன் பள்ளி கொண்டு இருப்பதால் இம்மலை சேஷாசல மெனவும், ஒருகாலத்தில் ஆதி சேஷனும் வாயுத்தேவனும் இந்த மலையில் போரிட்ட தால், 'ஆனந்தகிரி' எனவும்,

இங்கே ஆஞ்சநேயரின் அன்னை அஞ்சனாதேவி தவமிருந்ததால் அஞ்ஜனாத்திரி என் றும்,

திருமலை அனைத்துப் பாவங் களையும் தீர்க்கும் அற்புத சக்தி கொண்டுள்ளதால் 'வேங்கடாஜல' மாகவும், எப்போதும் இங்கே வேதங்கள் ஒலிக்கும் சப்தம் இருந்து கொண்டிருக்கும் காரணத்தால் 'வேதாசல'மெனவும்,

திருமலை வந்து கருடன் தங்கி பெருமாளை சேவித்து, தன் பாவ விமோசனத்தை அடைந்த தால் 'கருடாசல'மகவும்,

'விருஷன்' என்ற அரக்கன் இத்தலம் வந்து வேங்கடவனை சரண்புகுந்து வணங்கியதால் விருஷாத்ரி என்ற பெயரையும் கொண்டுள்ளது.

# அகத்திபத்த விலாசம்

அகத்தி பத்த விலாசமென்பது வடமொழியில் எழுதப்பட்ட பக்திநூல், இந்நூலில் சிவனடியார்களின் பல விபரங்களை பற்றி முழுவதுமாக கூறப்பட்டுள்ளது.

– ஆரூர்.ஆர்.சுப்பிரமணியம்
போன்: 9500142572



# தாய்க்கு திதி கொடுக்க உகந்த சித்திரா பௌர்ணமி



சித்திரா பௌர்ணமி என்பது; சித்திரை மாதம் பௌர்ணமி திதியில்; சித்திரை நட்சத்திரமும் கூடி வருவருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின்றது. மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி (சந்திரன் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கையி), சூரியன் உச்ச பலம் பெறும் மேஷ இராசியில் (சித்திரைமாதத்தில்) வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

இத் திதியும், நட்சத்திரமும், மாதமும் அம்மனுக்குரியனவாக இருப்பதனால்; இத் தினம் அம்பாளை பூசிக்க மிகவும் சிறப்புப் பொருந்திய நாளாக அமைகின்றது. அத்துடன் தாயாரை இழந்தவர்களுக்கு பிதிர் தர்பணம் செய்யும் நாளாகவும், பிரம்மஹத்தி தோஷம் பிடித்தவர்கள் தோஷம் நீங்கும் விரதமாகவும் அமைகின்றது.

இத் தினத்தில் ஆலயங்களிலே குறிப்பாக அம்மன் ஆலயங்களில் பால்குடங்கள் எடுப்பது, திருவிளக்கு பூஜை, விஷேச அபிஷேக ஆராதனைகளும், வழிபாடும் சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம்பெறுகின்றது. சில ஆலயங்களில் பொங்கல் விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சிவாலயங்களிலும், பெருமாள் (விஷ்ணு) கோவில்களிலும் சிறப்பு அபிஷேகங்கள், இறை வழிபாடு, வீதி ஊர்வலங்கள் என்றும் சிறப்பாக நடைபெறுகின்றன. அம்மனுக்குச் சிறப்புப் பொருத்திய இச்சித்திரா பௌர்ணமி விரத நாளிலேயே எமனின் சபையில் நம் பாவ புண்ணியக்கணக்கை இம்மியும் பிசகாமல் எழுதும் சித்திரகுப்தன் அவதரித்த நாளாகவும் இது கருதப்படுவதால் சித்திர புத்திரனார் விரதமும் அமைகின்றது. ஒவ்வொருவரும் செய்யும் புண்ணிய, பாவங்களைக் கணிப்பவர் சித்திர புத்திரனார் என்பது நம்பிக்கை. நாம் செய்யும் புண்ணிய, பாவங்களை நமது இறப்பின் பின் கணித்து அதற்கேற்ப மோட்சமோ, நரகமோ, மறுபிறவியில் பெறும் உருவமோ வழங்கப்படும் என்பது இந்துக்களின் ஐதீகம். சில கோவில்களில் சித்திரகுப்த பூஜையும் செய்யப்படுகிறது.

எமதர்மனின் கணக்கரான சித்ர குப்தன் தோன்றியது சித்திரை மாத பௌர்ணமி நாளில் தான். அதே மாதத்தில், சித்திரை நட்சத்திர தினத்தன்றுதான் நீலாதேவி மற்றம் கர்ணிகாம்பா ஆகியோரை சித்ரகுப்தன் மணந்ததாகப் புராணம் சொல்கிறது. அன்னை மீனாட்சி, மதுரையில் சொக்கநாதரை மணந்ததும், சித்திரை மாத பவுர்ணமி தினத்தில் தான். கள்ளழகர் மதுரை வைகையாற்றில் சித்திரை மாத பவுர்ணமியில் விழா காண்கிறார்

இந்த நம்பிக்கையின் மூலம் நாம் தீயனவற்றைத் தவிர்த்து நல்வழியில் வாழ வழியேற்படுகின்றது. சித்திர புத்திரனாரின் தீர்ப்பின்படியே கர்ம வினைகள் தொடரும் என்பதால் அவரை நினைத்து விரதமிருந்து வாழ்வைச் செம்மைப்படுத்தி நேரிய வழியில் செயற்பட மனப்பக்குவம் பெற இவ்விரதம் உதவுகின்றது. அதனால் போலும் "புண்ணியம் (தர்மம்) செய் புனிதனாவாய்" என்பதனை உணர்த்த அம்பாள் ஆலயங்களில் சித்திரபுத்தினார் கதை படித்து சித்திரைக் கஞ்சி வார்த்து தர்மம் செய்யத் தூண்டுகிறார்கள்.

மனதைச் செம்மைப்படுத்தி பகுத்தறிந்து தீயன தவிர்த்து, நல்லனவற்றை நாடி செயற்பட உறுதி கொள்ளும் இச்சித்திர புத்திரனார் விரதமானது மனித குலம் வாழ வேண்டிய சீரிய வழியைச் செப்பனிடும் ஒரு முக்கிய விரதமாகவும் கொள்ளப்படுகின்றது.

இறைவியாகிய அம்பாள்; இயற்கையின் சக்தியாக தர்மத்தின் காவலாக, உலக இயக்கத்தின் ஆதாரமாக விளங்குவதாக இந்துக்கள் கொள்கின்றனர். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்த அம்பாள் காலத்திற்குக் காலம் பல்வேறு அவதாரங்களை எடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

பூமா தேவியாக, பொறுமையின் இருப்பிடமாக வீற்றிருக்கும் அன்னை பொறுமை இழந்தால் எரிமலையாகக் கிளர்ந்தெழவும், புயலாக, வெள்ளமாக, வரட்சியாக, ஆழிப்பேரலையாக, அதிர்வாக, கொடுநோய்களாக வெளிப்பட்டு தன் சக்தியைக் காட்டி உலகத்தோருக்குப் புத்தியைப் புகட்டும் ஆற்றல் மிக்கவள்.

தாயாக இருந்து வாழ்வளிக்கும் அம்மனை இந்நன்நாளில் நம்பிக்கையுடன் தொழுது நின்றால் நிச்சயம் வாழ்வில் மலர்ச்சியும், எழுச்சியும் நம்மை நாடி வரும். துன்ப, துயரங்கள் தூர விலகி விடும். மங்களம் பொங்கும். நல்வாழ்வு கிட்டும் என புராணங்கள் கூறுகின்றன.

அக்ஷய திருதியை போலவே இந்த நாளிலும் தானங்கள் செய்வது நன்மை தரும் என்று கருதப்படுகிறது. வெய்யிலுக்கு இதமாக தயிர் சாதம், கைவிசிறி, பானகம், நீர்மோர் இவற்றை தானமாக அளிப்பது வழக்கம்.

உப்பில்லாமல் உணவருந்தி, பசும்பால், பசு நெய், பசுந்தயிர் தவிர்த்து சித்திரா பௌர்ணமி விரதம் இருந்து ஒரு மூங்கிலாலான முறத்தில் அரிசி, வெல்லம், மாங்காய், ஒரு நோட்டுப்புத்தகம், பேனா முதலியவையும் தானம் செய்யலாம்.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை அன்று விரதமிருந்து வழிபாடு செய்வதைப் போன்று; தாயாரை இழந்தவர்கள் சித்திரா பௌர்ணமி தினத் திலே விரதத்தை மேற்கொள்கின்றனர். தாயாரை இழந்தவர்கள் இத்தினத்திலே விரதமிருந்து வழிபாடு செய்வதால் இந்நாள் பிதிர்களுக்குரிய விரத நாளாகவும் அமைகின்றது.

பெற்று வளர்த்து சீராட்டி வளர்த்தெடுத்த தாயாரை அவர் மறைந்த பின்பும் நன்றியுடன் நினைவு கூரும் நாளான இந்நாளில் விரதமிருந்து வழிபாடு செய்வதன் மூலம் தாயின் தூய்மையின் பெருமையை மனதிலிருத்தி அவரது ஆன்மா இறைவன் திருவடியில் அமைதி பெற இறைவனைத் தொழும் நாளாகவும் இந்நாள் அமைகின்றது.

வான மண்டலத்தில்; சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தின் அளவை "திதி" என்கிறோம். அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் இணையும் (ஒரே நேர் கோட்டில் அமையும்) நாளில் மூதாதையர்களுக்கு 'திதி' கொடுப்பதும், (அன்று சூரிய சந்திரர்கள் ஒரே டிகிரியில் இணைந்திருப்பார்கள்.) பௌர்ணமியன்று சிறப்பான பூஜைகள், வழிபாடுகள் செய்வதும் சிறந்தது. (அன்று சூரிய சந்திரர்கள் சம சப்தமமாக இருப்பார்கள்.)

அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன், தினமும் 12 டிகிரி நகர்ந்து 15 நாளான பௌர்ணமி அன்று 180 ஆம் டிகிரியை அடைகிறது. சூரியனுக்கு சம சப்தமமாகி முழுமையான ஆகர்ஷண சக்தியை (புவியீர்ப்பு) வெளிப்படுத்துகிறது. அதனால் அன்று செய்யும் பூஜைகள், வழிபாடுகள் சிறப்பைப் பெறுகின்றன.

துன்பங்கள் தொலைய, துயரங்கள் நீங்க எம்மைப் பீடித்த தோஷங்கள் மறைய, வாழ்வில் நிம்மதி நிலைக்க, அன்னையை ஆசீர்வதிக்க சித்திரா பௌர்ணமி தினத்திலே விரதமிருந்து அம்மனையும் சித்திர புத்திரனாரையும் வழிபட்டு அருளும் நலமும் பெறுவோமாக.



ஆன்மிகமலர் மெயில் புக்

# அதிகாலை எழுந்தவுடன் செய்ய வேண்டிய காரியங்கள்

இன்றைய இயந்திர உலகத்தில் நீங்கள் அதிகாலை எழுந்த பின் உங்களின் திட்டமிட்ட காரியங்களை முடிக்க நேரம் பிடிக்கிறது. அதற்கு எழுந்தவுடன் சிறிது நேரம் எடுத்துக் கொண்டு ஆசார தர்மங்களை பின்பற்றினால் நாள் முழுவதும் அதற்கான பயனை அனுபவிக்கலாம்.

## அதிகாலை எழுந்தவுடன் முதலில்

வலது கையால் வலது காதைத் தொட்டுக் கொண்டு ஸ்ரீவிஷ்ணுவின் 'ஓம் கேசவாய நம:' என்று ஆரம்பிக்கும் 24 நாமங்களைச் சொல்ல வேண்டும்.

## ஸ்ரீ கணேச வந்தனம் செய்யவும்

வக்ரதுண்ட மஹாகாய கோடிசூர்ய ஸமப்ரப |
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ||

அர்த்தம்: துர்ஜனங்களை நாசம் செய்யும், மஹாகாய, அதாவது (சக்திமான்) கோடி சூர்ய பிரகாஸமாய் விளங்கும் அந்த கஜானனனிடம், என் எல்லா காரியங்களும் எந்தவித விக்னமு மில்லாமல் ஸித்தியடைய வந்தனம் செய்கிறேன்.

## தேவதா வந்தனம்

ப்ரம்மா முராரிஸ்த்ரிபுராந்தகாரிர்பானு: சசி பூமிஸுதோ புதச்ச |
குருச்ச சுக்ர: சனிராஹுகேதவ: குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம் ||

அர்த்தம்: படைப்பாளியான ப்ரம்மதேவன்; பராமரிப்பவனும் 'முரன்' என்ற அசுரனை வதம் செய்த ஸ்ரீவிஷ்ணு; ஸம்ஹரிப்பவரும் 'திரிபுர' ராக்ஷஸனை வதம் செய்த சிவன்; இந்த மூன்று முக்கிய தெய்வங்கள் மற்றும் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, ராஹு, கேது ஆகிய நவக்ரஹங்களும் என்னுடைய காலைப் பொழுதை சுபமானதாகச் செய்யட்டும்.

## புண்யபுருஷர்களின் ஸ்மரணம்

புண்யச்லோகோ நலோ ராஜா புண்யச்லோகோ யுதிஷ்டிர: |
புண்யச்லோகோ விதேஹச்ச புண்யச்லோகோ ஜனார்த்தன: ||
புண்யஜனஸ்துதி, ஸ்லோகம் 1

அர்த்தம்: புண்யவான்களான நளன், யுதிஷ்டிரன், விதேஹன் (ஜனக மஹாராஜா) மற்றும் பகவான் ஜனார்த்தனனை நான் சரணடைகிறேன்.

## ஸப்தசிரஞ்ஜீவிகளின் ஸ்மரணம்

அச்வத்தாமா பலிர்வியாஸோ ஹனுமாஞ்ச்ச விபீஷண: |
க்ருப: பரசுராமச்ச ஸப்தைதே சிரஞ்ஜீவின: ||
புண்யஜனஸ்துதி, ஸ்லோகம் 2

அர்த்தம்: துரோணாச்சார்யரின் புத்ரன் அச்வத்தாமா, கொடையாளியான பலிராஜா, வேதவியாஸர், ஹனுமான், விபீஷணன், க்ருபாச்சார்யர் மற்றும் பூமியில் 21 முறை துர்ஜன ராஜாக்களை வதம் செய்த பரசுராமர் ஆகிய இந்த ஏழு சிரஞ்ஜீவி களை நான் வணங்குகிறேன்.

## பஞ்சமஹாஸதிகளின் ஸ்மரணம்

அஹில்யா திரௌபதி ஸீதா தாரா மண்டோதரி ததா |
பஞ்சகம்நாஸ்மரேந்நித்யம்மஹாபாதகநாசனம்||
புண்யஜனஸ்துதி, ஸ்லோகம் 4

அர்த்தம்: கௌதம ரிஷியின் பத்னி அஹில்யா, பாண்டவர்களின் பத்னி திரௌபதி, ப்ரபு ராமசந்திரனின் பத்னி ஸீதா, வாலியின் பத்னி தாரா மற்றும் ராவணனின் பத்னி மண்டோதரி ஆகிய இந்த பஞ்சமஹாஸதிகளை யார் ஸ்மரணம் செய்கிறார்களோ அவர்களின் மஹாபாதகமும் நஷ்டமாகி விடும்.

குறிப்பு இந்த ஸ்லோகத்தை உச்சரிக்கும்போது சிலர் 'பஞ்சகன்யா ஸ்மரேந்நித்யம்ஞ்.' என்று சொல்கின்றனர். அது சரியில்லை. பஞ்சக் என்றால் ஐவரைக் குறிக்கும். நா என்றால் மனிதன். அதாவது 'பஞ்சகம் நா ஸ்மரேந்நித்யம்' என்பதன் அர்த்தம், மனிதர்கள் இந்த ஐவரின் சமூகத்தை ஸ்மரிக்க வேண்டும் என்பதே.

## ஏழு மோக்ஷபுரிகளின் ஸ்மரணம்

அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சி அவந்திகா |
புரி த்வாராவதி சைவ ஸப்தைதா மோக்ஷ தாயிகா: ||
நாரத புராணம், அத்யாயம் 27, ஸ்லோகம் 35

அர்த்தம் : அயோத்யா, மதுரா, மாயாவதி (ஹரித்வார்), காசி, காஞ்சி, அவந்திகா (உஜ்ஜயினி) மற்றும் த்வாரகா ஆகிய ஏழும் மோஷத்தைத் தரவல்ல ஏழு க்ஷேத்திரங்களாகும். இவற்றை நான் ஸ்மரணம் செய்கிறேன்.

## கரதரிசனம்

இரண்டு கைகளையும் ஒன்றாக சேர்த்து வைத்து அதில் மனதை ஒருமுகப்படுத்தி கீழ் வரும் ஸ்லோகத்தை உச்சரிக்கவும்.

கராக்ரே வஸதே லக்ஷ்மீ: கரமத்யே ஸரஸ்வதி|
கரமூலே து கோவிந்த: ப்ரபாதே கரதர்சனம் ||

அர்த்தம் : கைகளின் நுனி பாகத்தில் லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். கைகளின் மத்ய பாகத்தில் ஸரஸ்வதி வஸிக்கிறாள் மற்றும் கைகளின் அடி பாகத்தில் கோவிந்தன் உள்ளான். அதனால் விடியற்காலையில் எழுந்தவுடன் உள்ளங்கை களை தரிசனம் செய்ய வேண்டும்.

(இன்னொரு அர்த்தம் : உள்ளங்கைகளின் அடிப்பாகத்தில் ப்ரம்மா உள்ளார்.)

## ஸ்லோகத்தின் உள்ளர்த்தம்

லக்ஷ்மியின் மஹத்துவம்

கைகளின் நுனி பாகத்தில் லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். அதனால் வெளிப்புற உலகரீதியான பகுதி லக்ஷ்மி ரூபமாக உள்ளது. அதாவது உலகியலுக்கு லக்ஷ்மி (செல்வம் அல்ல, மாறாக பஞ்சமஹாபூதம், அன்னம், வஸ்திரம் போன்றவை) மிகவும் அவசியம்.

## ஸர்வம் கோவிந்த மயம்

மத்ய பாகத்தில் ஸரஸ்வதியாகவும் நுனி பாகத்தில் லக்ஷ்மியாகவும் வீற்றிருப்பவன் கோவிந்தனே. மஹான் ஞானேச்வர் மஹராஜ் அம்ருதானுபவத்தில் சிவபார்வதி ஸ்தவனில் கூறுகிறார், அடி, மத்ய மற்றும் நுனி மூன்றும் வெவ்வேறாகத் தெரிந்தாலும் கோவிந்தனே விசேஷ ரூபத்தில் அங்கு செயல்படுகிறார். பெரும்பாலும் எல்லா காரியங்களுமே விரல்களின் நுனி பாகத்தால் செய்யப்படுகிறது. அதனால் அங்கு லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். ஆனால் அனுபவத்தின் மூலம் பெருகும் ஞான ப்ரவாஹம் அந்த விரல்களுக்கு செல்லாவிட்டால் கைகளால் எந்தக் காரியமும் செய்ய முடியாது

ப.பூ. பரசுராம் பாண்டே மஹராஜ்

## பூமிவந்தனம்

'கராக்ரே வஸதே லக்ஷமிஞ்.' ஸ்லோகத்தைச் சொல்லிய பின் பூமியை பிரார்த்தனை செய்து இந்த ஸ்லோகத்தை உச்சரித்து பின் பூமியில் கால்களைப் பதிக்கவும்.

ஸமுத்ரவஸனே தேவி பர்வதஸ்தனமண்டலே |
விஷ்ணுபத்னி நமஸ்துப்யம் பாதஸ்பர்சம் க்ஷமஸ்வ மே ||

அர்த்தம் : ஸமுத்திரத்தை வஸ்திரமாக தரித்தவளும், மலைகளை தன் மார்பகங்களாகக் கொண்டவளும் பகவான் ஸ்ரீவிஷ்ணுவின் பத்தினியுமான ஹே பூமாதேவியே, நான் உன்னை நமஸ்கரிக்கிறேன். என் பாதங்களை உன் மேல் வைக்கப் போகிறேன். அதற்காக என்னை மன்னித்து விடு.

– மேலும் விவரங்களுக்கு
ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதி,
தொடர்பு: 9380949626

# இந்து கடவுளை மட்டும் கேலி பேசுபவர்களை அபாய சங்கு ஊதி அழிப்போம்

## எட்டப்பனாக மாறாமல் வாழ்வோம்



மதுரையம்பதியின் சொக்கநாத பெருமானின் அருளில் சொக்கிப்போன தீவிர பக்தர் தினந்தோறும் எம்பெருமானின் திருமேனியை சந்தனக்காப்பிட்டு வணங்குவதில் அளவிலா ஆனந்தம் அடையும் பண்பாளர். சந்தனக்காப்பிற்கு தன் கையால், கல்லில் சந்தனக்கட்டையை உரைத்து கோவிலில் வழங்குவதை தன் தலையாய கடமையாக செய்துவந்தார், வணிகமரபில் தோன்றிய அப்பெரும் பக்தர்...

விதிவசத்தால், மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன்... வடுக மன்னனால் வீழ்த்தப்பட்டான். வடுக மன்னனோ சமணம் தழுவியவன்... சைவத்தை மதுரையில் இருந்து நீக்க கடுமையாக முயன்றான்... சிவபக்தர்கள் மிரட்டப்பட்டார்கள், தண்டிக்கப்பட்டார்கள், பல சித்திரவதைகளுக்கு ஆளானார்கள்...

இந்த கடுமையான சூழலிலும், அந்த பக்தர் சந்தனக் காப்பை தொடர்ந்து செய்து வந்தார். இதை அறிந்த மன்னன், அவருக்கு சந்தனக்கட்டை கிடைக்கும் அனைத்து வழிகளையும் அடைத்தான். கையிருப்பில் இருந்த சந்தானமோ தீர்ந்து போனது. அந்த பக்தரோ, சந்தனக்கட்டையை தேடியலைந்து தளர்ந்து போனார்.

சொக்கனுக்கு சந்தனக்காப்பிட முடியவில்லையே என்ற துயரம் மனதை வருத்தியது... கோவிலுக்கு வந்தவர், சந்தனம் உரைக்கும் கல்லில், 'சந்தனக்கட்டை தானே இல்லை" என தன் முட்டியை வைத்து தேய்க்க ஆரம்பித்தார். சதை பிய்ந்து தொங்கியது... எழும்பு தேய ஆரம்பித்தது... நரம்பு அறுந்து குருதி கொப்பளித்தது...

"அன்பனே, நிறுத்து!!! உன் பக்தியை மெச்சினோம். மதுரையை ஆண்ட வடுக மன்னன் செய்த பாவத்திற்கு தண்டனை பெறுவான். இந்நாட்டின் பொறுப்பேற்று.. சைவமும், தர்மமும் தழைக்க செய்!!!" என அசரீரியாக உரைத்தான் எம்பெருமான்.

பக்தரின், கை குணமானது... அன்றிரவே, மதுரை மன்னன் காலமானார்... மன்னனற்ற மதுரை யம்பதிக்கு, மன்னனை தேர்ந்தெடுக்கபட்டத்து யானை மாலையுடன் புறப்பட்டு வந்து, கோவிலில் இருந்த அந்த பக்தரின் கழுத்தில் மாலை யிட்டது... மதுரையின் மன்னனானார் அந்த பக்தர்... கிரீடமில்லை... செங்கோலில்லை... உருத்திராட்சமும்... சைவமும் மட்டுமே ஆட்சி செய்தது....

வணிககுலத்தில் பிறந்து தன் சிவத்தொண்டால் எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு மதுரையின் மன்னனான அப்பக்தர் தான்.... **மூர்த்தி நாயனார்...**

எதற்கு இந்த கதை...

என் தொண்டு, சிவத்தொண்டு... அத்தொண்டிற்காக எந்த எல்லைக்கும் செல்வேன் என்ற மூர்த்தி நாயனார் அளவிற்கு இறை நம்பிக்கையும், இறைப்பற்றும், கலியுகத்தில் சாத்தியமில்லை தான்... நாமெல்லாம் மூர்த்தி நாயனாராக ஆக முடியதுதான்.

ஆனாலும்,

ஒரு சராசரி இந்துவாக.... சனாதன தர்மத்தின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாக... நம் தெய்வங்களின் மீது உண்மையான பக்தியுள்ளவர்களாக.... நம் பக்தியில் ஒரு குறைந்தபட்ச நேர்மை... குறைந்தபட்ச நேர்மை... நமக்கு வேண்டாமா??

நம் பிள்ளைகளுக்கு படிப்பிற்கு...
நம் பிள்ளைக்கு வெளிநாட்டு வேலைக்கு...
நம் பிள்ளை நல்ல வாழ்க்கை துணைக்கு...
நம் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்திற்கு...
நம் குடும்பத்தின் இனிமையான வாழ்க்கைக்கு...
நம் வாழ்க்கையின் அமைதிக்கு...
நம் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பிற்கு...
நம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு...
நம் வாழ்க்கையில் வேண்டிய வசதிக்கு...

இப்படி எல்லாவற்றிற்கும்... நம் தெய்வங்களின் அருள் வேண்டும் என்று கோவில் கோவிலாக சென்று இறைவனிடம் முறையிட்டு வேண்டிக் கொள்கிறோம்.

சிவனிடமும், பெருமாளிடமும், அம்பாளிடமும், கிருஷ்ணனிடமும், ஆஞ்சநேயனிடமும், முருகனிடமும், விநாயகரிடமும், அய்யப்பனிடமும், கருப்பசாமியிடமும், காளியாத்தாவிடமும், முனீஸ்வரனிடமும், அய்யனாரிடமும், நம் குல தெய்வங்களிடமும்... தினந்தோறும் செல்கிறோம்

மொத்தத்தில் ஒரு சுயநலவாதியைப்போல நம் தேவையை மட்டும் தெய்வத்திடம் கேட்கிறோம். ஆனால் தெய்வங்களுக்கு என்ன வேண்டும் என்று ஒரு கணம் நாம் சிந்தித்ததுண்டா?

- ரூ. 20 கொடுத்து நாம் செய்யும் அர்ச்சனை போதுமா?
- தங்கத்தேர் இழுத்தால் போதுமா?
- பட்டுவஸ்த்திரம் சாற்றினால் மட்டும் போதுமா?
- முடிகாணிக்கை செலுத்தினால் போதுமா?

நம் இந்துமதம் எந்த வித கட்டுப்பாடுகளையும் இந்துக்களுக்கு விதிக்கவில்லை, முழுவதும் சுதந்திரம் கொடுத்துள்ளது.

அவசியம் கோயிலுக்கு வர வற்புறுத்தவில்லை,
கடுமையான விரதம் இருக்க வற்புறுத்தவில்லை,
கோடி கோடியாக பணம் தரச்சொல்லி வற்புறுத்தவில்லை,

ஏற்றத்தாழ்வுகளை பார்த்து கடவுள் அருள் புரிவதில்லை,

இன்னும் ஒருபடி மேலே சொல்ல வேண்டுமானால், அன்பை மட்டுமே கடவுளாக பார்க்க சொல்லும் ஒரேமதம் உலகில் இந்து மதம் மட்டுமே. (இன்று பல கோயில்களில், பணத்திற்கும், ஜாதிக்கும், பதவிக்கும், மனித தரத்திற்கும் தரும் முக்கியத்துவங்கள் அனைத்தும் ஒருசில சுயநல மனிதர்களால் உருவாக்கப்பட்டது, மேற்கண்ட நிகழ்வுகளை எந்த கடவுள்களும் ஏற்றுக் கொள்ள வில்லை)

ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகளையும் கடவுள் வகுக்கவில்லை, இடையில் தோன்றிய மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனாலும் அதை பின்பற்ற எந்த இந்து கடவுளும் ஆணையிடவில்லை.

கடவுள் கூறுவதெல்லாம் ஒன்றைமட்டுமே....

**நண்பனாக, உறவினராக, தாயாக, தந்தையாக அல்லது ஒரு குடும்ப உறுப்பினராக நினைத்து கடவுளை வழிபடமட்டுமே இறைவன் வற்புறுத்துகிறான்.**

இதற்கு பல்வேறு இதிகாச, புராண கதைகள் உண்டு. காலைதூக்கி இறைவனின் கண்ணில் வைத்த கண்ணப்பனின் பக்தியைதான் சிவன் கொண்டானே தவிர, பால் பாயாசமும், பட்டாடை படைத்த பக்தனின் ஆடம்பரத்தை அவர் விரும்பவில்லை, ஏற்கவுமில்லை.





ஏழை பக்தன் அழுக்கு துணியில் கொண்டு வந்த அவல்பொறியை விரும்பி கிருஷ்ணர் ஏற்றானே தவிர, ஆடம்பரமாக செய்த எதையும் பொருட்படுத்தவில்லை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நம் மதத்தையும், நமது தெய்வங்களையும் உலகமே ஏற்றுக் கொண்டு அவர்கள் நமது தெய்வத்தின் பின் அணிவகுத்து வருகின்றனர்.

நமது தெய்வங்களின் பெருமை உலக மக்கள் போற்றும் சமயத்தில், நமக்கு சொந்தமான தெய்வத்தை நித்திப்பவர்களை அழிக்கும் உரிமையும் நமக்கு உண்டு.

தேவையை மட்டும் இறைவனிடம் கேட்கும் நாம், நம் மத சின்னங்களை அணிந்து கொண்டே, நம் கடவுளை கேலியும் கிண்டலும் செய்பவர்களிடம் அன்பாகவும் ஆதரவாகவும் பழகுவது எந்த வகையில் நியாயம்.

**பெற்ற தாயையும், தந்தையையும், நம்மை காக்கும் கடவுளையும் பழிக் கும் எவனாயிருந்தாலும் அவன் எந்தவகையில் உறவாகயிருந்தாலும் அவனை தூக்கி எரிவதே சாலச் சிறந்தது.**

கடவுளை நம்பும் மனிதர்களே, கடவுளை மறுப்பவர்களையும், இந்து கடவுளை நிந்திப்பவர்களையும் கொண்டாடும் அனைவரும் எட்டப்பர்களுக்கு சமமானவர்களே...

நம் இந்து தர்மத்திற்கு ஏற்படும் தீங்குகளை சாதாரணமாக கடந்து செல்வதும்... யார் நம் தெய்வங்களையும், நம் நம்பிக்கைகளையும் அசிங்கப்படுத்துகிறானோ... அவர்களையே பாதுகாப்பதும்... நம் வணங்கும் தெய்வத்திற்கு நாம் செய்யும் துரோகமில்லையா? இதைக்கண்டு நம் மனசாட்சி உறுத்தவில்லையென்று சொன்னால், நம் பக்தி பொய்யென்று தானே அர்த்தம்?

உண்மையான இந்து யார் நம்பிக்கையையும் கொச்சைப்படுத்தமாட்டான். அதே நேரம்...

இங்கிருந்து மாறியவர்கள்... மாறிய மத கடவுளை விட்டுக்கொடுப்பதில்லை...

இடையிலே மாறிய, மதத்தின் மீது அசைக்க முடியாத பிடிப்போடு இருக்கிறார்கள்...

எத்தனையோ, படையெடுப்புகளினாலும்... அந்நிய ஆட்சிகளினாலும்.... மாற்ற முடியாத நம்பிக்கைக்கு சொந்தக்காரர்களான இந்துக்களாகிய நாம், நம்முள் இருந்தே நம்மை பிரித்தாளும் சக்திகளிடம் சொரணையற்றவர்காளாக இருப்பது தான் வேதனை...

சாதி என்ற ஒற்றை சொல்லை வைத்தே நம்மை வெள்ளைக்காரன் வகுத்துக்கொடுத்த திட்டத்தின் படி... கால்டுவெல்லின் வாரிசுகளும்... சோஷலிச வரலாற்று ஆசிரியர்களும்... பொய்யையும் புரட்டையும் சொல்லி நம்மை பிரிப்பதை உணரமுடியாத அறியாமையில் இருப்பது... நம் தெய்வங்களுக்கு நாம் செய்யும் அவமானம்...

கோவில்கள் இடிக்கப்படுகின்றன... கோவில் நிலங்கள் கொள்ளை போகின்றன... சிலைகள் கடத்தப்படுகின்றன... நம் நம்பிக்கைகள் தினம் தோறும் நசுக்கப்படுகின்றன...

ஐயப்பன் கோவிலுக்கு மாலை போடுவோம்... ஐயப்பனை களங்கப்படுத்துபவனை ஆதரிப்போம்...

பாவை நோன்பிருப்போம்... ஆண்டாள் நாச்சியாரை அசிங்கப்படுத்துபவனை ஆதரிப்போம்...

அழகர் ஆற்றில் இறங்குவதை லட்சக்கணக்கில் கூடிக் கொண்டாடுவோம்... அழகரை கேலிப் பேசுபவனை ஆதரிப்போம்...

இராமனை வணங்குவோம்... இராமன் எந்தக் கல்லூரியில் படித்தார் என்று கேலிப்பேசுபவனை ஆதரிப்போம்...

சிவனையும், பார்வதியையும் வணங்குவோம்... அம்மையப்பனை கேலிப்பேசுபவனை ஆதரிப் போம்...

இதெல்லாம், எப்படிப்பட்ட முரண்பாடுகள்...

கேட்டால், இந்துமதத்தை யாராலும் அழிக்க முடியாது என்று தற்பெருமை வேறு...

**இந்துமதத்திற்கு சோதனை ஏற்பட்ட போதெல்லாம்...**

**ஆதிசங்கரர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி மக்களுக்கு வழிக்காட்டினார்கள்.... மக்களும் அவர்கள் காட்டிய நெறியில் சென்று இந்து சனாதன தர்மத்தை மீட்டெடுத்தார்கள்...**

இன்றைக்கு நாம் எப்படியிருக்கிறோம் என்பதை... சிந்தித்துப் பார்க்கவேண்டும்...

குறைந்தபட்சம், நம் நம்பிக்கைகளை கொச்சைப்படுத்துபவர்களை... பிற மதத்தை உயர்த்தி, நம்மை தாழ்த்தி பரிகாசம் செய்யும் செய்பவர்களை அவசியம் புறக்கணிக்கவேண்டும்....

**இவ்வாறு நாம் ஒன்று கூடும் போது, மேற்கண்ட நயவஞ்சக கூட்டம், வீணாக தேன்கூட்டில் கல் எறியக் கூடாது என் பதை புரிந்து கொள்வார்கள்.**



நாம் வணங்கும் இறைவனை நம் குடும்பஉறுப்பினர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டு பக்தியை மட்டுமல்ல இந்துக் கள் ஒற்றுமையையும் உலகிற்கு பறை சாற்றுவோம்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் தேசியத்தையும் மதத்தையும் போற்றும் போதும் உலகிற்கே அன்பை போதித்து, அரவணைப்பை உணர்த்திய நமது இந்து மதக் கடவுளை நாம் அவசியம் போற்றியே ஆக வேண்டும். இதைச் செய்தால் தான் நம் வாரிசுகள் இந்துக்களாக பெருமையோடு வாழ முடியும்.

**கடவுளை கேலி கிண்டல் செய்யும் கயவர்களுக்கு இடம் கொ டுத்து, இந்து கடவுளை வணங்கும் எட்டப்பர்களாக நாம் வாழ வேண்டாம்.**

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# aanmeegamalar.com

# இணையதளத்தின்

## mobile app

GET IT ON
Google Play

அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்

**Aanmeega malar (mobile app)**

டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்